விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: எட்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 ஆனி 07 வியாழக்கிழமை (21.06.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 184

ராம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## இராணுவம் சுட்டதில் மூவர் உயிரிழப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்குடாப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இராணுவத்தினரால் மேற் கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத் தில் மூவர் கொல்லப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்டவர்கள் விடுதலைப்புலிக ளின் உறுப்பினர்கள் என இராணுவத்தினர் தெரிவித்த போதும் இவர்கள் அக்கரைப்பற் றுப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் மீன்பிடித் தொழில் (08 ஆம் பக்கம் பார்க்க)

## ★ வெற்றிலைக்கேணித் தாக்குதலில் ★

## கடற்படை டோறா படகு சேதம்-புலிகள் 40 கடற்புலிகள் உயிரிழப்பு-கடற்படை

(கொழும்பு)

வெற்றிலைக்கேணிக் கடற்பரப்பில் கடற் புலிகளுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் 40 ற்கும் மேற்பட்ட கடற்புலிகள் கொல்லப்பட்டதாகக் கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் டி.கே.பி.தஸாநாயக்க தெரி வித்தார்.

தேசிய பாதுகாப்பு நிலைமைகள் குறித்து விளக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற் றுக் காலை தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையி லேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது, (08 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் சூடு இருவர் உயிரிழப்பு

வவுனியா செட்டிக்குளம் பிரதேசத்தில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இருவர் கொல்லப்பட் டுள்ளதுடன் இருவர் காயமடைந்துள்ளனர்.

இத் தாக்குதல் சம்பவத்தில் பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவரும் 16 வயதுச் சிறு வன் ஒருவருமே கொல்லப்பட்டுள்ளனர். இரண்டு பொலிஸார் காயமடைந்துள்ளனர். இச் சம்பவம் தொடர்பாக வவுனியா மாவட்ட நீதி வான் எம்.இளஞ்செழியன் நேரில் சென்று மரண விசாரணைகளை மேற்கொண்டார். (சு-3)

# தனது கட்சியுடன் இணைந்து செயற்படுமாறு சந்திரிகாவுக்கு மங்கள பகிரங்க அழைப்பு



## மின்னஞ்சல் மூலம் கடிதம் அனுப்பி வைப்பு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சி (மக்கள் பிரிவு)யில் இணையுமாறு முன் னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அதன் தலைவர் மங்கள சமரவீர அழைப்பு விடுத்துள்ளார். இது தொடர்பான அழைப்பை மின் னஞ்சல் மூலம் மங்கள சமரவீர அனுப்பி வைத்துள்ளார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சரியான வழியில் இட்டுச் செல்ல உதவி வழங்கு மாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (08 ஆம் பக்கம் பார்க்க)



## உலகில் மோசமான நாடுகளில் இலங்கை 25 ஆவது இடத்தில்

(கொழும்பு)

2007 ஆம் ஆண்டு உலகில் தோல்விய டைந்த நாடுகளில் இலங்கை 25-வது இடத்தில் உள்ளது.

வெளிவிவகாரக் கொள்கை இதழ் நிறுவ னமும் அமைதிக்கான நிதி அமைப்பும் இணைந்து அனைத்துலக நாடுகள் தொடர் பில் ஒரு ஆய்வை மேற்கொண்டன.

அகதிகள், இடம்பெயர்ந்தோர், பொருளா தாரம், மனித உரிமைகள், பாதுகாப்பு நிலை மைகள், நகர்ப்புற அபிவிருத்தி, பொதுச் சேவைகள் உள்ளிட்ட 12 காரணிகளை அடிப் படையாகக் கொண்டு நாடுகள் மதிப்பிடப் பட்டன.

மொத்தம் 117 நாடுகளை அடிப்படையா கக் கொண்டு (08 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் சமாதானப் பேச்சை நடத்த அமெரிக்க காங்கிரஸில் தீர்மானம்

(வாஷிங்டன்)

இலங்கையில் அமைதிப் பேச்சுக்களை நடத்த வலியுறுத்தும் தீர்மானம் ஒன்று அமெரிக்க காங்கிரஸ் முன்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஜனநாயக காங்கிரஸ் பிராங்க் பலோன் (நியூ ஜெர்சி), ரிபப்ளிக் காங்கிரஸின் ஜொரி வெல்லர்(இல்லினாய்ஸ்) ஆகியோர் இதனை முன்வைத்துள்ளனர்.

இலங்கை மற்றும் தென்கிழக்கு ஆசியா வில் அமைதியை உருவாக்குவதில் அமெ ரிக்காவுக்கு தந்திரோபாய உத்தி உள்ளது என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை நிலைமைகள் மோசமடைந்து வருவதாகவும் தமிழர் கட்சிகள் உள்ளிட்ட அனைத்துத் (08 ஆம் பக்கம் பார்க்க)

இணைந்து அனைத்துலக நாடுகள் தொடர்பில் ஒரு ஆய்வை மேற்கொண்டன.

மொத்தம் 117 நாடுகளை அடிப்படையாகக் கொண்டு (08 ஆம் பக்கம் பார்க்க)

ஜனநாயக காங்கிரஸ் பிராங்க பலோனே (நியூ ஜெர்சி), ரிபப்ளிக் காங்கிரஸின் ஜெரி வெல்லர்(இல்லினாய்ஸ்) ஆகியோர் இதனை

இலங்கை நிலைமைகள் மோசமடைந்து வருவதாகவும் தமிழர் கட்சிகள் உள்ளிட்ட அனைத்துத் (08 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை யுவதிக்கு சவுதியில் மரண தண்டனை

சவுதி அரேபியாவில் வீட்டுப்பணிப் பெண்ணாகக் கடமையாற்றிய இலங்கை யுவதி ஒருவருக்குக் கொலைக் குற்றச்சாட்டின் பேரில் அந்நாட்டு நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது. தனது எஜமானின் நான்கு வயது மகளைத் தான் கொலை செய்ததாக ஏற்றுக் கொண்டதையடுத்து சவுதி நீதிமன்றம் இத் தண்டனையை வழங்கியுள்ளது.

இப் பணிப் பெண்ணின கைரேகை உயிரிழந்த குழந்தையின் கழுத்தில்பதிந்திருந்ததாக இவ்நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. இவ்வாறு மரண தண்டனை விதிக்கப்பட்டவர் மூதூர் பகுதியைச் சேர்ந்தவர் எனவும் இவர் இரண்டு வருடங்களுக்கு முன்னர் இக் கொலையைச் செய்துள்ளதாகவும் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது. (ச-3)

# அரசாங்கத்தின் மீதோ புலிகளின் மீதோ அழுத்தங்களைப் பிரயோகிக்கப் போவதில்லை

## போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தின் மீதோ விடுதலைப்புலிகள் மீதோ போர் நிறுத்த ஒப்பந்தம் தொடர்பாக எந்தவித அழுத்தங்களையும் பிரயோகிக்கப் போவதில்லை என போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளதாக ஏ.எவ்.பி. செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையின் போர் நிறுத்தம் குறித்து நோர்வேயிலிருந்து அவதானிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதனை அவதானிப் போர் 2002 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட யுத்தநிறுத்த ஒப்பந்தம் தொடர்பான ஏற்பாடுகளை பிரயோகிக்கப் போவதில்லை என தெரிவித்துள்ளதாக ஏ.எவ்.பி. தெரிவித்துள்ளது.

கடந்த ஒரு வருடகாலமாக இலங்கை இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே யுத்தம் நடந்து கொண்டிருக்கின்றது. இதனையடுத்தே தாம் இத் தீர்மானத்தை எடுத்ததாகக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் எமது நிலைமை தொடர்பாக மே மாதம் 12 ஆம் திகதி அறிவித்துள்ளோம் என கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஒருவரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாங்கள் தற் (08 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பிலிருந்து வெளியேற்றப்பட்ட தமிழ்த் தம்பதியர் வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து கொழும்புக்குச் சென்று கொழும்பில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்ட தம்பதியினரைப் பலவந்தமாக அவர்கள் தங்கியிருந்த வீட்டிலிருந்து வெளியேற்றியதை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் மனுவொன்று நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வெள்ளவத்தைப் பகுதியில் வசித்து வந்த தம்பதியினர் இவ் மனுவைத் தாக்கல் செய்தனர். கடந்த 7 ஆம் திகதி அதிகாலை 4 மணியளவில் தங்களுடைய வசிப்பிடங்களுக்கு வந்த வெள்ளவத்தை பொலிஸார் பலவந்தமாக வீட்டில் இருந்தவர்களை வெளியேற்றி (08 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றத்திற்கென நிரந்தர பொலிஸார் நியமனம்

### சபாநாயகர் உறுதி

(கொழும்பு)

நாடாளுமன்றத்திற்கு என நிரந்தரப் பொலிஸாரை நியமிக்கவுள்ளதாக சபாநாயகர் டபிள்யு.ஜே.எம்.லொக்கு பண்டார நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார். இது தொடர்பாகப் பொலிஸ் மாஅதிபர் விக்டர் பெரேராவுடன் கலந்துரையாடியதாக சபாநாயகர் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க எழுப்பிய சிறப்புரிமை மீறல் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும்போதே அவர்இதனைக் கூறினார்.

பொலிஸார் தனது வாகனத்தை நிறுத்தியதுடன் (08 ஆம் பக்கம் பார்க்க)

# நோர்வேயின் அனுசரணை பணிகளில் தலையிடும் நோக்கம் எமக்கு கிடையாது

## இலங்கை விவகாரங்களுக்கான பிரிட்டனின் உயர்அதிகாரி தெரிவிப்பு

இலங்கையின் சமாதான முயற்சிகளில் உதவிபுரிவதற்கு பிரிட்டன் தயாராக உள்ளது. எனினும் நோர்வேயின் அனுசரணைப் பணிகளில் தலையிடும் நோக்கம் எமக்கு கிடையாது என இலங்கை விவகாரங்களுக்கான பிரிட்டனின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார். சமாதான முயற்சிகள் வெற்றியளிக்காத நிலையில் அனுசரணைப் பணியிலிருந்து நோர்வே விலகப்போவதாக தகவல்கள் வெளியாகின.

இந் நிலையில் நோர்வேயின் இடத்தை நிரப்ப பிரிட்டன் விரும்புவதாக வெளியான செய்திகள் தொடர்பாக கேட்டபோதே அவ் அதிகாரி இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது; அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தான 2002 ஆம் ஆண்டு முதல் நோர்வே தனது அனுசரணைப்பணிகளை சிறப்பாக மேற்கொண்டு வருகின்றது.

போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு மிகமோசமான அச்சுறுத்தல் ஏற்பட்ட வேளையில் நோர்வே மேற்கொண்ட சிறப்பான இராஜதந்திர செயற்பாடுகளின் விளைவாகவே அவ் வொப்பந்தம் இன்னும் முறிவடையாமல் உள்ளது.

இந் நிலையில் சமாதான முயற்சிகள் வெற்றியளிக்காமைக்கு அல்லது எதிர்பார்த்த பலனை தராததற்கு நோர்வேயை காரணமாக்குவதை ஏற்றுக்கொள்ள முடியாது. மேலும் இது நியாயமற்ற குற்றச்சாட்டாகும்.

சமாதான பேச்சுவார்த்தைகள் முறிவடைந்தமைக்கும் வன்முறைகள் அதிகரித்தமைக்கும் அரசாங்கமும் விடுதலைப்புலிகளுமே பொறுப்பாளிகள்.

இரு தரப்பும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கும் மற்றும் சமாதான முயற்சிகளுக்குமான ஊக்குவிப்புக்களையும் உதவிகளையும் மாத்திரமே மூன்றாவது தரப்பினால் வழங்கமுடியும்.

அந்த வகையில் இலங்கையின் சமாதான முயற்சிகளில் தனது அனுசரணைப் பணியை நோர்வே சிறப்பாக மேற்கொண்டுள்ளது. சம்பந்தப்பட்ட இரு தரப்பும் சமாதான முயற்சிகளில் உண்மையான அர்ப்பணிப்பை வெளிக்காட்டி விட்டுக்கொடுப்புடன் செயற்படாமையே தற்போதைய நிலைமைக்கு காரணமாகும்.

இலங்கையில் மேற்கொள்ளப்படும் சமாதான முன்னெடுப்புகளுக்கு தேவையான உதவிகளை வழங்க பிரிட்டன் தயாராக உள்ளது. நோர்வேயின் அனுசரணைப் பணிகளுக்கு பிரிட்டன் அரசாங்கம் ஆதரவளிப்பதோடு அதற்கு தொடர்ந்தும் உதவிகளை வழங்கும் என அவ் அதிகாரி தெரிவித்தார். (ச-5)

## முன்பள்ளி விளையாட்டு

(யாழ்ப்பாணம்)

நவக்கிரி எல்லாளன் வாணி முன்பள்ளியின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி நாளை பிற்பகல் 2.30 மணிக்கு தலைவர் க.சயந்தன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் யாழ்.மாவட்ட சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் மலர்மகள் தயாபரன் முதன்மை விருந்தினராக கலந்து கொள்கிறார். (ச)

◆ ◆ ◆

(யாழ்ப்பாணம்)

புத்தூர் வளர்மதி கல்விக் கழகம் நடாத்தும் வளர்மதி முன்பள்ளி மழலைகளின் வருடாந்த விளையாட்டு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வளர்மதி முன்பள்ளி மைதானத்தில் நடைபெறும்.

வளர்மதி கல்விக் கழகத் தலைவர் து.ரமேஸ் தலைமையில் நடைபெறும் விளையாட்டு விழாவில் யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி அலகின் பதில் பணிப்பாளர் கே.கணேசநாதன்,யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் திருமதி ஞா.கணேசநாதன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்கின்றனர். (ச)

## புதிய நிர்வாகிகள் தெரிவுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் அரிமாக் கழகத்தின் 2007/2008 ஆண்டிற்கான புதிய நிர்வாகிகள் தெரிவுக் கூட்டம் தலைவர் லயன் ந.சண்முகவேல் தலைமையில் எதிர்வரும் 24 ஆம் திகதி காலை 9 மணிக்கு கந்தரோடையில் லயன் மகாதேவாவின் இல்லத்தில் நடைபெறும். (ச)

# சர்வதேச ஊடக பிரதிநிதிகள் இருவர் நேற்று மாலை வலம்புரிக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண ஊடக நிறுவனங்களும், ஊடக வியலாளர்களும் தனிமைப்படுத்தப் படமாட்டார்கள். அவர்களுக்கு சர்வதேச ஊடக நிறுவனங்கள் துணையாக இருக்கு மென சர்வதேச ஊடகவியலாளர் அமைப் புக்களின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச ஊடக அனுசரணை அமைப் பின் பிரதிநிதியான தோமஸ் மோயர் ஹியூஜஸ்,எல்லைகள் அற்ற பத்திரிகையாளர் அமைப்பின் பிரதிநிதியான வின்சன்ட் ப்று சேவ் ஆகியோர் நேற்று யாழ்ப்பாணம் வந்தனர்.

யாழ்.வந்த இவர்கள் நேற்று மாலை வலம்புரி அலுவலகத்தில் ஆசிரிய பீடத்தினரைச் சந்தித்து கலந்துரையாடினார். இக் கலந்துரையாடலின் போது யாழ்ப்பாண ஊடக நிறுவனங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக கேட்டறிந்து கொண்டனர். யாழ்ப்பாண விஜயத்தை முடித்துக் கொண்டு இன்று மாலை கொழும்பு திரும்பும் அவர்கள் நாளை கொழும்பில் விசேட பத்திரிகையாளர் சந்திப்பொன்றையும் மேற்கொள்ள வுள்ளனர். (ச)

# மூதூர் கிழக்கு மற்றும் சம்பூரிலிருந்து எவரையும் வெளியேற்றும் எண்ணம் இல்லை

## பிரதமர் பாராளுமன்றத்தில் தெரிவிப்பு

(கொழும்பு)

மூதூர் கிழக்கு மற்றும் சம்பூர் பிரதேசங்களிலிருந்து எவரையும் வெளியேற்றும் எண்ணம் அரசாங்கத்திடம் இல்லையென பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

சம்பூர் மற்றும் மூதூர் பிரதேசங்கள் வர்த்தமானி அறிவித்தலின் மூலம் உயர் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டமை குறித்து ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக எடுக்கப்படும் எந்தவொரு தீர்மானமும் எக்காரணம் கொண்டும் மீளப்பெறப்படமாட்டாது எனவும் அவர் கூறினார்.

இவ் ஒத்திவைப்புப் பிரேரணையை சபையில் சமர்ப்பித்து உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் கௌரவமான சமாதானத்தின் மூலமே நாட்டின் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியுமென குறிப்பிட்டார்.

சம்பூர் மற்றும் மூதூர் கிழக்குப் பிரதேசங்களை அதி உயர் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தியதன் மூலம் அப் பிரதேசங்களை அரசாங்கம் இன ரீதியான போரை முன்னெடுத்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை இவ் விவாதத்தில் உரையாற்றிய ஐக்கியதேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல அதி உயர் பாதுகாப்பு வலயங்கள் ஏற்படுத்தப்படும் நடவடிக்கை நாட்டின் நற்பெயருக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையானது தமிழ் மக்களை விரட்டியடிக்கும் செயல் அல்ல என விவாதத்தின் போது ஜே.வி.பி.நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயந்த வீரசேகர குறிப்பிட்டார். (ச-3)

## அவசர காலச் சட்டம் அமுலில் இருக்கையில் ஆட்கடத்தல் சர்வ சாதாரணமாகி விட்டது

### பிரதி அமைச்சர் செல்லச்சாமி உரை

(கொழும்பு)

உலக மகாயுத்தமும் கூட நான்கு வருடகாலமே நடந்தது. அந்த யுத்தத்தோடு தொடர்புபட்டிருந்த யப்பான், ஜேர்மனி போன்ற நாடுகளெல்லாம் இனியொரு யுத்தமே வேண்டாம் என்று பிரார்த்திக்கின்றன.

ஆனால் நமது நாட்டிலோ வருடாந்தம் கோடிக்கணக்கில் யுத்தத்துக்காக செலவழித்துக்கொண்டிருக்கின்றோம்.இருபது வருடங்களுக்கு மேலாக நாட்டில் யுத்த சூழ்நிலையே நிலவி வருகிறது. வருடா வருடம் அவசர காலச்சட்டத்தை நீடித்துக்கொண்டே வருகிறோம்.இந்தச் சட்டத்தைக் கண்டு எவருமே இப்போது

## எறிகணைத் தாக்குதலில் கணவனும் மனைவியும் காயம்

(கிளிநொச்சி)




SATS - TECH Satellite System

செய்மதி தொலைக்காட்சி

(DISH Antenna)

உபகரணங்கள் மிகக்குறைந்த விலையில்

| | | |
|---|---|---|
| 01. EUROSTAR 65 Cm Dish Antenna | | =4250/= |
| 02. Arisat | 60 Cm Dish Antenna | =3750/= |
| 03. Sats Tech | 60 Cm Dish Antenna | =3000/= |
| 04. Necola digital Receiver (China) | | =5000/= |
| 05. Mini digital Receiver (China) | | =5000/= |

| | |
|---|---|
| 05. Mini digital Receiver (China) | =5000/= |
| 06. DVB Super Slim Receiver (China) | =6000/= |
| 07. Life Vision (Biggellow) (China) | =7000/= |
| 08. Topfield Digital Receiver (Korea) | =11000/= |
| 09. Super max C Band LNBF (Korea) | =2750/= |
| 10. Digital Telecom Ku band LNBF | =800/= |
| 11. TechNosat Ku band LNBF | =900/= |
| 12. Eurostar Ku band LNBF (Blue) | =950/= |
| 13. Eurostar Ku band LNBF (White) | =1000/= |
| 14. Novatech 550 MHZ Amp | =3750/= |
| 15. Novatech 750 MHZ Amp | =4250/= |
| 16. Metro dual out 550 MHZ Amp | =4500/= |

மற்றும் கேபிள் T.V உபகரணங்கள் மலிவான விலையில் கிடைக்கும்.

**மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட விலைக் கழிவு உண்டு**

மேலதிக விபரங்களுக்கு:-

**SATS-TECH ENGINEER'S**

*இல.182 K.K.S. Road (குளப்பிட்டி சேச் அருகில்) கொக்குவில்*

Phone :- 021 222 5908

Hotline:- 0777 710785

(C-174)


டே வருகிறோம். இந்தச் சட்டத்தைக் கண்டு எவருமே இப்போது பயப்படுவதில்லை.

இந்த அவசரகாலச் சட்டம் அமுலில் இருக்கும் தறுவாயில் தான் வெள்ளை வான் சமாச்சாரம், ஆட்கடத்தல், காணாமல் போதல் போன்றவையெல்லாம் சர்வசாதாரணமாகியுள்ளன. இவ்வாறு தகவல் தொலைத் தொடர்பு பிரதி அமைச்சரும் இ.தொ.காவின் பிரதித்தலைவருமான எம்.எஸ்.செல்லச்சாமி தெரிவித்தார். (ச)

## சகல அரசாங்க அதிகாரிகளுக்கும் கைத்தொலைபேசி வழங்கும் திட்டம்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் சகல மாவட்டச் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் கிராமசேவகர்களுக்கு கையடக்கத் தொலைபேசிகளை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்க அதிகாரிகளுடன் இலகுவாகத் தொடர்பினை ஏற்படுத்துவதன் மூலமாக பொதுமக்கள் தமக்கான சேவைகளை விரைவாகப் பெற்றுக்கொள்வதற்கும் தமது குறைபாடுகள் குறித்து அதிகாரிகளுக்கு தெரிவிப்பதற்கும் வகை செய்யும் பொருட்டு அரசாங்க அதிகாரிகளுக்கு இவ்வாறு தொலைபேசிகள் வழங்கப்படவுள்ளன.

இத் திட்டத்தின் முதற் கட்ட வைபவம் அமைச்சர்களான கரு ஜெயசூரிய, சந்திரசிறி கஜதீர ஆகியோரால் பொலநறுவையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன்போது மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் கிராம சேவகர்கள் பலருக்கு கையடக்கத் தொலைபேசிகளை அமைச்சர்கள் வழங்கி வைத்தனர். குறித்த அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள கையடக்கத் தொலைபேசிகளின் இலக்கங்கள் அவர்களின் பிரதேசத்திலுள்ள பொதுமக்களுக்கு வழங்கப்படவுள்ளன.

பொதுமக்கள் தமக்கான சேவைகளைப் பெற்றுக்கொள்ளவும். குறித்த அதிகாரிகளைச் சந்திப்பதற்கான நேரத்தினை பெற்றுக்கொள்ளவும் இந்த தொலைபேசி இலக்கங்களை பயன்படுத்த முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

(கிளிநொச்சி)

யாழ்.வடமராட்சி கிழக்கு பகுதி மீது படையினர் நேற்று காலை நடத்திய எறிகணைத் தாக்குதலின்போது கணவன், மனைவி ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்.

பேதுருப்பிள்ளை பிரான்ஸிஸ் சபரி (வயது 38) மற்றும் அவரது மனைவியான பிரான்ஸிஸ் சவரிமுத்து ஒலின்கனிஸ்ரா (வயது33) ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர். இவர்கள் செம்பியன்பற்றிலிருந்து இடம் பெயர்ந்து உடுத்துறையில் வசித்து வந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-3,5)


**மணமகள் தேவை**

1975-01-13 இல் பிறந்த B.Sc (Engineering) தகைமையுடைய, கொழும்பில் தனியார் நிறுவனம் ஒன்றில் தொழில் புரியும் செங்குந்த முதலியார் மரபைச் சேர்ந்த அழகான மணமகனுக்கு படித்த, அழகான நற்குணமுடைய மணமகள் தேவை.

மணமகனின் நட்சத்திரம் உத்தராடம் 3 ஆம் பாதம் (மகரராசி) செவ்வாய் தோஷம் இல்லை மொத்தக் கிரகபாவம் 4 3/4 ஆகும்.

*தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்;*

வி.எஸ்.கந்தசாமி, அருளம்பலம் ஒழுங்கை, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம். (145)

**புறொயிலர் உயிர்க் கோழி இறைச்சி விற்பனைக்கு உண்டு**

புறொயிலர் உயிர் இறைச்சிக் கோழி, கல்பேட் கோழி மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: NEW R.S.K FARM

மான் பாடசாலை வீதி, உடுவில். (138)

# இன்று ஒரு தகவல்

## சேரும் இடம்...!

ஓர் ஊரிலே ஓர் இறைநேசர் இருந்தார். அவர் ஒருநாள் ஒரு தெருவழியாகப் போய்க் கொண்டிருந்தார். சிகை அலங்காரம் செய்யும் ஒரு கடையைத் தேடி அவர் போய்க் கொண்டிருந்தார்.

அவர் போகிற வழியிலே எதிர்ப்பக்கமாக ஒருவர் வந்து கொண்டிருந்தார்.

அவர் இந்த இறைநேசரைப் பார்த்தார். தன் கையிலே இருந்த ஒரு பையை இவரிடம் அன்பளிப்பாகக் கொடுத்தார். "ஐயா... தயவு பண்ணி இதை என்னுடைய அன்பளிப்பாக ஏற்றுக்கொள்ள வேண்டும்... இதிலே தங்கக் காசுகள் உண்டு" என்று சொன்னார்.

இறைநேசர் அவரிடமிருந்து அந்தப் பையை வாங்கிக் கொண்டார். சிகை அலங்காரக் கடையொன்றினுள் அவர் நுழைந்தார். அங்கே இருந்த சிகை அலங்கரிப்பவர் பக்கத்திலே அந்தப் பையைக் கொண்டு போய் வைத்தார்.

"ஐயா... இது தங்களுக்கு அன்பளிப்பு" என்றார். அப்புறம் இவர் இருக்கையில் அமர்ந்தார். இறைநேசருக்கு அவர் சிகை அலங்காரம் செய்ய ஆரம்பித்தார்.

அப்பொழுது... அந்தக் கடைக்கு வெளியிலே ஒரு சத்தம் கேட்டது... யாரோ ஒருவர் புலம்பிக் கொண்டிருந்தார். "நான் வாழ்க்கையிலே மிகவும் துன்பப்படுகிறேன்... பணம் இல்லாமல் சிரமப்படுகிறேன்... எனக்கு யார் உதவி செய்வார்கள்?..." என அவர் தனது கஷ்டத்தை வாய்விட்டுக் கூறிக்கொண்டிருந்தார்.

முடி திருத்திக் கொண்டிருந்தவர் காதிலே இது விழுந்தது. உடனே அவர் சைகை காட்டி அந்த ஆளைக் கூப்பிட்டார். அந்தப் பையைச் சுட்டிக்காட்டி அதை எடுத்துக் கொண்டு போகுமாறு சைகை செய்தார். வந்தவரும் அந்தப் பையை எடுத்துக் கொண்டு போய் விட்டார். இதையெல்லாம் அந்த இறைநேசர் கவனித்துக் கொண்டிருந்தார்.

"ஐயா... அந்தப் பைக்குள்ளே நிறையத் தங்கக் காசுகள் இருப்பதாக அதனை என்னிடம் கொடுத்தவர் சொன்னார்... ஆனால் நீங்கள் அதைப் பிரித்துக் கூடப் பார்க்காமல் இவரை எடுத்துக் கொண்டு போகச் சொல்லி விட்டீர்களே" என்று இறைநேசர் அவரிடம் கூறினார்.

அதற்கு அந்த முடி திருத்துபவர் சொன்னார்; "ஐயா... தாங்கள் இந்தக் கடைக்குள்ளே நுழைந்ததைப் பார்த்தவுடனே தங்களுக்கு முடி திருத்தம் செய்வதற்கு பிரதி பலனை எதிர்பார்க்கக் கூடாது... எதையும் வாங்கக் கூடாது என்று என் மனதிலே நினைத்துக் கொண்டேன்...

அதனாலே அந்தப் பைக்குள்ளே விலை மதிக்க முடியாத மாணிக்கம் இருந்தாலும் சரி... எனக்கு ஆசை ஏற்படாது.

உங்களுக்கு ஆசையில்லாத காரணத்தால் நீங்கள் அந்தப் பையைப் பிரித்துப் பார்க்கவில்லை...

அதே மாதிரி எனக்கும் ஆசை இல்லாத காரணத்தால் நானும் அதைப் பிரித்துப் பார்க்க வேண்டுமென நினைக்க வில்லை...

அந்தச் சிந்தனையும் எனக்கு இல்லை... இறைவனின் நாட்டம் போல... அந்தப் பை யாருக்குத் தேவைப்பட்டதோ அவரிடம் போய்ச் சேர்ந்து விட்டது..."

இது ஒரு நண்பர் மூலமாக நான் தெரிந்து கொண்ட கதை. யாருக்கு எது தேவையோ அது அவரிடம் போய்ச் சேர்வது தான் முறை.

ஆனால் சராசரி மனிதர்கள் எப்படித் தெரியுமா? நமக்குத் தேவையில்லாத ஒரு பொருள் நம்மிடம் இருந்தால் கூட அதை அடுத்தவர்களுக்குக் கொடுக்க மனம் வராது. நம்ம ஆள் ஒருத்தர் நடந்து போய்க் கொண்டிருந்தார் குதிரை வாங்குவதற்காக!

எதிரே வந்த ஒருத்தர் இவரிடம் ஒரு கழுதையை அன்பளிப்பாகக் கொடுத்துவிட்டுப் போய்விட்டார். இது அவருக்குத் தேவையில்லை. அதனாலே இவருடைய நண்பர் ஒருத்தர் "இதோ பாரப்பா... உனக்குக் குதிரை தேவை... இது கழுதை... அதனாலே இதை எனக்கு அன்பளிப்பாகக் கொடுத்துவிடு" என்றார்.

இதற்கு அவர், "அப்படியெல்லாம் அவசரப்பட்டுக் கொடுத்துவிடக் கூடாது... கொஞ்சக் காலம் இதை வைத்திருந்து பார்க்கலாம்... ஒருவேளை இந்தக் கழுதையே குதிரையாக ஆனாலும் ஆகலாம்.

அப்படி ஆகிறதா இல்லையா என்பதைப் பார்த்துக் கொண்டு, அதன்பின் உனக்குக் கொடுக்கலாமா? வேண்டாமா என்று முடிவு பண்ணலாம்" என்றார்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## இந்துவின் பிரதி அதிபர் லண்டன் பயணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க லண்டன் கிளையினர் எதிர்வரும் 30ஆம் திகதி "கலையரசி" எனும் சஞ்சிகையினை வெளியிடவுள்ளனர்.

இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வதற்காக யாழ். இந்துக் கல்லூரியின் பிரதி அதிபர் பொ.மகேஸ்வரன் லண்டன் சென்றுள்ளார். (அ)

## நடமாடும் ஆய்வுகூட சேவை

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை பிரதேசத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலையில் பிரதி வெள்ளிக்கிழமைகளில் நடமாடும் ஆய்வுகூட மருத்துவ சேவை நடைபெற்று வருகின்றது.

நடமாடும் வாகனத்தில் வரும் இச் சேவையில் இரத்தப் பரிசோதனை, சிறுநீர் பரிசோதனை மற்றும் வைத்திய சேவைகள் நடைபெற்றுவரும் வேளையில் ஊர்காவற்றுறை மக்கள் இம் மருத்துவசேவையை பயன்படுத்துமாறு மாவட்ட வைத்திய அதிகாரி சுவரொட்டி மூலம் கேட்டுள்ளார். (அ-72)

## நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பு தினமும்

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பு தினமும் எதிர்வரும் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாவலர் துரையப்பா பிள்ளை மண்டபத்தில் கல்லூரி அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயனன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் க.கணேசும் கௌரவ விருந்தினராக அன்னை சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நினைவுப்பேருரையை 'சமூக மேம்பாட்டுக்கான ஊடக அறிவுக்கல்வி' என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக சமூகவியல் பேராசிரியர் கலாநிதி என். சண் முகலிங்கன் நிகழ்த்தவுள்ளார். (அ)

## சர்வதேச போதைப்பொருள் எதிர்ப்பு தினம் நன்-26

வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம் நடாத்தும் சர்வதேச போதைப் பொருள் எதிர்ப்பு தினம் யூன் 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப.1 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத் தலைவர் க.புஷ்பராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கௌரவ விருந்தினராக யாழ். போதனா வைத்திய சாலை இரத்தவங்கி வைத்திய கலாநிதி இ.சிவசங்கர், உடுவில் கோட்டக் கல்விப் பணிப் பாளர் செ.குபேரநாதன், இணுவில் மத்திய கல்லூரி அதி பர் சு.சதானந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.


ஆசிரியர்களான செ. சிவகுமார் மற்றும் சு. அழகானந்தம் ஆகியோரது சிறப்புரைகளும் இடம்பெறவுள்ளது. அத்துடன் பேச்சு, கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளது. (அ)

**திருநெல்வேலி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான இரதோற்சவம்**

### பரமானந்தம் தனை அருள்வாய் தாயே!

சீர் பூத்த திருநெல்வேலி பதியுறையும்
செழுமை தவழ் முத்துமாரியம்மா
தேரேறி வந்தருளும் திருநாளில்
சீரும் திருவும் பொலியச் செய்வாய்
ஊரெல்லாம் செழித்து உவகையுற
உவந்தருள்வாய் நின் அருளை
பார்பூத்த பவமெல்லாம் நீத்து
பரமானந்தம் தனையருள்வாய் தாயே
-அடியார்

## மணிபல்லவத்தில் மஹோற்சவம்



### நயினை நாகபூசணி அம்மன் பாமாலை

### ஆறாம் திருவிழா

### கோடி இன்பம் நாம் காண!

அலையோசைத் தாலாட்டில்
அருள் சுரக்கும் தேவியே.- நீ
ஏற்றி நிற்கும் கொடியோடு
கோடி இன்பம் நாம் காணவேண்டும்
சூழ்ந்துள்ள கொடும்பகை அகற்றி
தூயவொளி நம்கரம் சேரவேண்டும்
அத்தனை இன்பமும் வேண்டுமெனில் - நின்
அருள் நமக்கு நிறைய வேண்டும்

ஸ்ரீ.சோபிகா
வட்டுக்கோட்டை.

### உன்னருளைத் தருவாயம்மா!

தங்க நிறச் சுந்தரியாக
தமிழ் விஞ்சும் அம்பிகையாக
அங்கமெல்லாம் அரவணிந்து
ஆதியது பாதியென
குங்குமப் பொட்டோடு
குமிண் சிரிப்போடு
ஐந்துதலை நாகத்துள்
அமர்ந்தே அருள்பவளே
தந்துவிடு உன்னருளை
தரணிதனில் நாம் வாழ!

அ.கலாநிதி

### சக்தியாய் நின்று சகலதும் இயக்கும் தாயே

சக்தியாய் உலகில் நின்று
சகலதும் இயக்கும் தாயே
புத்தியாய் உள்ளி ருந்து
புரியவே வைக்கும் தாயே
பக்தியாய் உன்னை நாளும்
பாடியே துதிப்பேன் தாயே
சித்தியே தந்து என்னைச்
சிறப்புற வைப்பாய் தாயே!

சிந்துபுரக் கவிராயர்

### நீ நினைந்தால்....

போற்றி என்று அனுதினமும்
புரிந்து நால்வே தமுந்துதிக்கத்
தோற்று முலகத் துயிரனைத்தும்
துன்ப மகன்று நிறைவுபெற
ஏற்று நயினை அமர்ந்தருளி
இலங்கு நாக பூஷணியே
சாற்று மடியார்க் கேதுதுயர்
தாயே சிறிது நீ நினைந்தால்...

நயினை வித்துவான் சி.குமாரசாமி

### நயினையம் பதியினிலே நல்லருள் புரிபவளே!

அரவத்தின் மடியினிலே அழகாய் வீற்றிருந்து
கடல் அலையின் ஓசையிலே உன் தண்டை ஒலி தாலாட்ட
காலைக் கதிரவனின் சுடர் ஒளி துலங்க
குங்குமக் கோலத்தின் உன் குளிர்ந்த முகம் சிவந்திருக்க
திருக்கைலாயக் காட்சியுடன் வீதியுலா வந்து
வாடி வருந்தி வண்ணமுகம் காண நாடி உன் பாதம் பணிந்து
சரண்புகுந்தோம் சங்கரியே தூயவரம் தருவாயோ
நயினையம் பதியினிலே நல்லருள் புரிபவளே!

ஆத்திசூடியூர் வி.மகாலிங்கம்

# வட்டுக்கோட்டை - தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணக

# (கண்ணகை அம்மன்



# தேர்த்திருவிழா சிறப்

## மகோற்சவ குருவின் ஆசி




பசுபதியாகிய சிவபெருமான் சூரிய சந்திரர்கள் உருள்களாகவும் மற்றைச் சரம் அசரம் ஆகிய பொருள்கள் ஒவ்வொரு உறுப்புக்களாகவும் நான்கு வேதங்கள் குதிரைகளாகவும் அமைத்த தேரில் மேருவை வில்லாகவும் விட்டுவை அம்பாகவும் அக்கினியை அவ் அம்பின் கூர்வாயாகவும் கொண்டு எழுந்தருளிய பிரமாவாகிய சாரதி பிரணவமாகிய சவுக்குக் கொண்டு செலுத்தத் திரிபுரத்த சுரர்களை தமது திருப்புன்முறுவலால் எரித்தருளினார்.

இத்தனை சிறப்புக்கள் வாய்ந்த தேரை தரிசிப்பதாலே நாங்கள் செய்த பாவங் கள் அனைத்தும் தீர்ந்து விடும்.

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.

*உயரப்புலம்* **சிவஸ்ரீ சிவ பிரபாகரகுருக்கள்**

## பரிபாலன சபை தலைவர் ஆசியுரை



யாழ். குடாநாட்டிலுள்ள இந்து ஆலயங்களில் சகல பரிவாரமூர்த்திகள் அடங்கிய சிவ ஆலயங்களில் பழமை பொருந்திய புதுமை மிக்க ஆலயமாக கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங் கேஸ்வர ஆலயமும் திகழ்கிறது.

இவ்வாலயத்தில் வருடம் தோறும் பங்குனி மாதத்தில் 10 நாட்கள் கண்ணகி அம்மனுக்கு அலங்கார உற்சவமும் ஆனி மாதத்தில் கண்ணலிங்கேஸ்வரருக்கு வருடாந்த மகோற்சவமும் நடைபெறுகிறது.

அன்னதானம், தாகசாந்தி முதலியவை இக்காலத்தில் வழங்கப்படுகிறது. ஆலய மூலமாக சமூகப் பணிகளை மேலும் மேலும் விஸ்தரிக்கவும் ஆன்மீக வளர்ச்சியை மேம்படுத்வும் நிர்வாக சபையும் தொண்டர் சபையும் ஒன்றிணைந்து செயல்பட்டு வருவது ஒரு சிறந்த செயல். மக்களுக்கு சாந்தி, சமாதானம், மகிழ்ச்சி நிலவ தெய்வ அனுக்கிரகம் கிடைக் கட்டும்.

**கலக் விசுவநாதன்J.P** (தலைவர்)

## என்கடன் பணி செய்து கிடப்பதே

மானிட பிறவியில் பிறந்த வகையில் நாம் எமது வாழ்நாள் முழுவதும் பிற உயிர்களிடம் அன்பு காட்டி அனைவரையும் நேசித்து எல்லோருக்கும் உதவி செய்து பிறவிக்கடன் தீர்ப்பது மேலாகும்.

அந்த வகையில் வட்டுக்கோட்டை – தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகி அம்மன் ஆலய நிர்வாகத்தினர் உற்சவகாலம் மட்டுமல்லாது தினமும் பல அறப்பணிகளைச் செய்வது கண்கூடு. நிர்வாகத்தினர் ஆலய பணிகளுடன் சைவநெறிக்கான அறநெறிப்பாட வகுப்புகள், அன்னதானம், சிரமதானம், கல்வித்தானம் என்பவற்றோடு அயலில் உள்ள பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், மாதர் சங்கம், உடலுளலிருந்திச் சங்கம், முதியோர் இல்லம், விளையாட்டுக் கழகம், சமய சமூக மேம்பாட்டு நிகழ்வுகள் அனைத்திலும் ஒன்று சேர்ந்து பரிபாலன சபை மூலம் அரும் பெரும் தொண்டாற்றி ஆலயத்திற்கான அறப்பணிகளை மகத்தான சேவையாக செய்வதைக் காண முடிகிறது. இன்றைய இரதோற்சவ நாளன்று மென்மேலும் பரிபாலன சபையினரின் சேவை கள் வளரவும் தொண்டர்கள், அடியார்கள், மக்கள் அனைவருக்கும் அன்னையின் அரவணைப்பு அருள்பாலித்து அனைவரும் சீரும் சிறப்புடனும் வாழ அன்னையை வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

*மக்கள் சேவையே மகேசன் சேவை!*

**சி.சச்சிதானந்தம்.**

## ஆலய வரலாறு

ஆரிய மன்னர் ஆட்சிக் காலமாகிய 13ஆம் நூற்றாண்டில் தென் இந்தியாவிலுள்ள திருவையாறு எனும் இடத்திலிருந்து யாழ்ப்பாணம் வந்த இராமநாதப் பட்டர் எனும் பக்தர் வட்டுக்கோட்டை மேற்குப் பகுதியிலே குடியேறினார். இவர் வேதம், ஆயுள்வேதம் என்பவற்றில் சிறந்து விளங்கினார்.

சிவ பக்தரான இவருக்கு கண்ணகி அம்மன் தனது இருப்பிடத்தை திருக் குறிப்புக் காட்ட இவர் தெக்கணப்பாய் எனும் புண்ணிய பூமியில் கண்ணகி அம் மனுக்கு கோயில் அமைத்து பூசை வழிபாடு செய்து வந்தார். கூழங்கைச் சக்கரவர்த்தி காலத்தில் 1240ஆம் ஆண்டளவில் மந்திரி சபையில் அங்கம் வகித்த வேதிய விற்பன்னர் சுப்பிரமணிய சாஸ்திரியும் அவர் முன்னோரும் பின்னோரும் இக் கோயிலை பராமரித்தனர். காசிப கோத்திரமும் மந்திரியுமான சுப்பிரமணிய சிவாச்சாரியார் அம்மை மீது பாடல்கள் பாடியுள்ளார்.

1513ஆம் ஆண்டளவில் பிரம் மஸ்ரீ வெங்கடேஸ்வரக் குருக்கள் கோயிலை புனரமைத்துக் கட்டினார். ஆலயத்திலே பூசைகள் , திரு விழாக்கள், பொங்கல்கள் சிறப்பாக நடை பெற்றன. இலங்கைக்கு வந்த போர்த்துக்கேயப் படைகள் யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றிய பின் தம் மதத்தை பரப்பும் ஆவலில் சைவக் கோயில்களை இடித்தழித்து தம் வணக்கஸ்தலங்களை அமைத்து வந்தனர். அவ் வகையில் இந்த ஆலயத்தையும் இடிக்க முற்பட்ட போது ஊரவர்கள் மாதா கோயில் எனக் கூறியதற்கு இணங்க அவர் கட்கு மாதா கோயிலாக காட்சியளித்ததால் அழிக்காது விட்டுச் சென்ற பழமையும் புது மையும் மிக்கது இவ் ஆலயமாகும்.



இச் சம்பவத்தால் இவ்வாலயத்தை இன்றும் மாதா கோயில் என அழைப்பர்.1865 ஆம் ஆண்டளவில் இக்கோயிலின் வட மேற்கு திசையில் ஆலய பித்தர் கேணியும் இளைப்பாறு மடமும் இக் கோயிலை பரிபாலித்து வந்த நாகேசையர் சிவசுப்பிரமணியக் குருக்கள் காலத்தில் கட்டப்பட்டது. இங்கு வருடத்தில் 4 தடவைகள் தீர்த்த உற்சவம் நடைபெறுகிறது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் காலத்தில் கண்ணகி வழிபாடு யாழ்ப்பாணத்தில் குறைந்தது. இத்தாக்கம் இவ்வாலயத்திலும் ஏற்பட்டதெனலாம். 1882 ஆம் ஆண்டு நா.சிவசுப்பிரமணிய சிவாச்சாரியார் அவர்கள் கோயிலை புனரமைத்து தான்தோன்றி லிங்கத்தை மூலஸ்தானத்தில் பிரதிஸ்டை செய்து இறைவனுக்கு கண்ணலிங்கேஸ்வரர் எனப் பெயர் சூட்டினார். இவ் லிங்கத்தில் முக அமைப்பை இன்றும் காணக்கூடியதாக உள்ளது சிறப்பிற்குரியது. முன்பு மூலஸ்தானத்திலிருந்த கண்ணகி அம்மனை தெற்கு வாசலில் அதாவது சிவனின் சக்தி இருக்க வேண்டிய இடத்தில் பிரதிஸ்டை செய்து கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயம் எனப் பெயர் சூட்டினார். நா. சிவசுப்பிரமணிய சிவாச்சாரியார் இத் தலத்து இறைவன் மீது பல பாடல்களையும் திருவூஞ்சலையும் பாடியுள்ளார்.

1930 ஆம் ஆண்டளவில் இவ்வூரில் வாழ்ந்த க.சுப்பிரமணியம் என்ற அடியவர் வசந்த மண்டபம், தெற்கு மண்டபம், மணிக்கூட்டு கோபுரம் ஆகியவற்றை கட்டி கோயிலை விஸ்தரித்தார். இச் சமயம் சிவகாமி அம்பாள் சமேத நடராஜ மூர்த்தம் பிரதிஸ்டை செய்யப்பட்டது. பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய சிவாச்சா ரியாரின் பரம்பரையில் ஒருவரான பல் கலை வல்லுநர் பிரம்மஸ்ரீ க.குருமூர்த் திக் குருக்களால் ஆலயம் பரிபாலிக்கப் பட்டு வந்தது. பின்பு இவரின் வயோதிபம், இயலாமை காரணமாக இவ்வாலய உபயகாரர்களால் திருப்பணிச் சபை 29.06.1975 இல் உருவாக்கப்பட்டது. இச்



சிபார்சின் படி அ
பிரதிஸ்டை செய்
சிவனின் மூலஸ்
ஆலயம் அமை



கோயில்களாக மக
கந்தசாமி குடும்பத்
திருப்பணிகளை
மும் கண்ணகி அம்
ஆனி உத்தரத்தை
சிப் பங்குனித் திங்
இங்கு தைப் பொங்
திருக்கார்த்திகை வி
பூசையும், பன்னிரு
என்பனவும் சமய தீ
பெறுகிறது. இங்கு
ஆரம்பித் துள்ளன
பணி களை யும் பே
முன் பள்ளி பாட
கொடுப்பனவுகள்


நவீன வடிவமைப்புக்களில் அழகிய தங்க நகைகளை செய்து பெற்றுக் கொள்ள நாட வேண்டிய ஸ்தாபனம்

**பூரணி நகைமாடம்**

தங்கப் பவுண் நகை வியாபாரம்

ஓடர் நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத் துடன் 22 கரட்டில் செய்து கொடுக்கப்படும்

வின்சர்தியேட்டர்அருகாமை 1/4 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அழகுசாதனப் பொருட்களை மொத்தமாகப் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

**வண்ண அருவி அழகு மாடம்**

உரிமையாளர்:- அ.அழகராஜா
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

**கஜமுகன் ஹாட்வெயர்ஸ்**

PEPSI , Caltex oil என்பவற்றின்
யாழ். ஏக விநியோகஸ்தர்கள்

147,149 ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

பலசரக்குப் பொருட்கள் , பால்மா வகைகள் மற்றும் பிஸ்கட் வகைகளை பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

**ஸ்ரீமுருகன் களஞ்சியம்**

T.P. / Fax :-021-2225459
மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.

**R.S.T றோஸ்நாடு**

அரிசி வகைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும் கொப்பரா, எள்ளு மற்றும் இலுப்பைப் பருப்பு போன்றவற்றை மூன்றுகிலோ முதல் ஆயிரம் கிலோ வரை உடன் இயந்திரத்தில் அரைத்து எண்ணெய்யாக ஊற்றவும் நாடவேண்டிய ஒரே இடம்

**பாலன் அரிசி ஆலை**

மாவடிச் சந்தி. வட்டுக்கோட்டை.


கட்
வ
பொரு
அம்

பலசர
மூளா

# ண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயம் ம்மன் ஆலயம்)

# ருப்பிதழ் - 21. 06. 2007









சபையின் போஷகராக க.குருமூர்த்திக் குருக்கள் நியமிக்கப்பட்டார். திருப்பணி வேலைகளை தொடர்ந்து 12.07.1978 இல் கும்பாபிஷேகம் நடைபெற்றது. தொடர்ந்தும் திருப்பணி வேலைகளையும் பரிபாலத்தையும் இச்சபையே மேற்கொண்டு வந்தது. பின்பு 1983 ஆம் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பிரம்மஸ்ரீ க.குருமூர்த்திக் குருக்கள் பிரேரணைப்படி திருப்பணிச் சபை பரிபாலன சபையாக பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 1990 ஆம் ஆண்டு இளைஞர்களை கொண்ட தொண்டர்சபை பரிபாலன சபையின் அங்கமாக உருவாக்கப்பட்டது. பிரம்மஸ்ரீ குருமூர்த்திக் குருக்களின் மறைவின் பின் அவரது மகள் திருமதி ச.நாகம்மா இவ்வாலயத்தை பரிபாலிக்கும் உரிமையை சட்டப்படி பரிபாலன சபைக்கு வழங்கியுள்ளார்.

1998 ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1999 ஆம் ஆண்டு திரு.க.விசுவநாதன் குடும் பத்தினர் சண்டேஸ்வரர் ஆலயம் அமைப்பித்து கும்பாபிஷேகம் செய்தனர். இந்து குருமார் ஒன்றியத்தின் சிபார்சின் படி ஆலய அமை ப்பில் பாரிய மாற்றம் ஏற்பட்டது. இதுவரை சிவனின் சக்தியின் இடத்தில் பிரதிஸ்டை செய்யப்பட்டிருந்; த கண்ணகி அம்மனுக்கு தனிக்கோயில் கட்டப்பட்டது. கண்ணகி அம்மன் சிவனின் மூலஸ்தானத்திற்கு வடக்கே வேப்பமரத்தடியில் கோயில் கட்ட திருக்குறிப்புக் காட்ட அவ்விடத்தில் ஆலயம் அமைக்கப்பட்டது. சி வனுக்கு புதிதாக அம்பாள் பிரதிஸ்டை செய்யப்பட்டார். இச்சமயம் பரிவாரக்





கோயில்களாக மகா விஸ்ணு கோயிலை அமரர் சுப்பிரமணியம் குடும்பத்தினரும், நடேசர் சபையை அமரர் கந்தசாமி குடும்பத்தினரும் அமைத்தனர். முருகன், வைரவர் சன்னதிகளும் அமைக்கப்பட்டன. மேற்படி திருப்பணிகளை தொடர்ந்து 2003 ஆம் ஆண்டு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயமும் கண்ணகி அம்மன் ஆலயமும் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. கண்ணலிங்கேஸ்வரப் பெருமானுக்கு ஆனி உத்தரத்தை தீர்த்தமாகக் கொண்ட 10 நாள் கொடியேற்று உற்சவமும், கண்ணகி அம்மனுக்கு கடைசிப் பங்குனித் திங்களை தீர்த்தோற்சவமாகக் கொண்ட 10 நாள் அலங்கார உற்சவமும் நடைபெறுகிறது. இங்கு தைப் பொங்கல் உற்சவம், மகா சிவாராத்திரி, ஆடிப்பூர சங்காபிஷேகம், நவராத்திரி, சோமவாரம், திருக்கார்த்திகை விளக்கு, திருவெம்பாவை போன்ற உற்சவங்களும், செவ்வாய்க்கிழமைகளில் பஜனைப் பூசையும், பன்னிரு திருமுறை ஓதல், ஒவ்வொரு மாதமும் மூல நட்சத்திரத்தில் திருவாசகம் முற்றும் ஓதுதல் என்பனவும் சமய தீட்சை வழங்கும் நிகழ்வும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. அறநெறிப் பாடசாலை நடைபெறுகிறது. இங்கு தட்சணாமூர்த்தியை பிரதிஸ்டை செய்ய திரு.க.விசுவநாதன் குடும்பத்தினர் திருப்பணியை ஆரம்பித் துள்ளனர். இவ்வாலய பரிபாலன சபையும் தொண்டர் சபையும் சமயப் பணிகளோடு சமுதாயப் பணி கள‌ை யும் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

முன் பள்ளி பாடசாலை ஆசிரியர்களுக்கும் கண்ணகை அம்மன் ஆலய நிர்வாகத்தினரால் மாதாந்த கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றது.

பரிபாலன சபையும், தொண்டர்சபையும்

## செஞ்சொற்செல்வரின் ஆசியுரை



அற்புதம் நிறைந்த கண்ணலிங்கேஸ்வரப் பெருமானின் அருளாட்சியை போற்றாதவர்களில்லை. வட்டுக்கோட்டையில் வரமருளும் நாயகியாக விளங்கும் கண்ணலிங்கேஸ்வரப் பெருமான் திருத்தேரில் பவனிவரும் திருநாள் பக்திப்பெருநாள்.

காலந்தவறாது பூசை ஒழுங்கு, திருமுறைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் தெய்வீக நெறி முறை, அடியார்க்கு அன்னம் பாலிக்கும் அறத்தொண்டு அத்தனையும் இத் திருக்கோவிலின் திருவருள் பொலிவை வெளிப்படுத்தி நிற்கின்றது.


இவ்வாலயத்தின் சிறப்புக்கு இலக்கணமாக இளம் தொண்டர்கள் கூடி இனிய அறப்பணிகள் ஆற்றிவருவது குறிப்பிடத்தக்கது.

கண்ணலிங்கேஸ்வரப் பெருமானின் திருத்தேர் பவனியோடு இந் நாட்டில் அறம் நிலைபெற்று விடிவுண்டாக அனைவரும் ஒன்றுபட்டுப் பிரார்த்திப்போமாக.

*"அப்பனை சரணடைந்தால் அதிகவரம் பெறலாம்"*

ஆறு திருமுருகன்

## தொண்டர் சபை தலைவரின் வாழ்த்து



ஆலயம் தொழுவது சாலவும் நன்று எனும் வாக்கிற்கு ஏற்ப முன்னோர் ஆலயங்களை அமைத்து மக்கள் திருவருள் பெற வழிகாட்டினர்.

இவ்வாலயங்களை ஆகம முறைப்படி பரிபாலிக்கவும் சமயக் கருத்துக்களை பரப்பவும் சமய சமூகப் பணிகளை மேற்கொள்ளவும் அனைவரும் முன்வரவேண்டும்.

எல்லோரும் மனிதாபி மானத்தை பேணி இறையருளைப் பெறவும் நாட்டில் அமைதி, சமாதானம் நிலவவும் தொண்டர் சபையினராகிய நாம் இறைவனை இறைஞ்சுகின்றோம்.

- சி.கௌரிதரன்
தலைவர், தொண்டர் சபை

## காத்திடுவாள் கண்ணகை அம்பாள்

பத்தினித் தெய்வமென பார்போற்றும் கண்ணகிக்கு
இத் தினி இலங்கையிலே தெக்கணப்பாய் பதியினிலே
சொத்தாக கோவில் ஒன்று உண்டு - நீ
நித்தம் நித்தம் சென்றங்கு வணங்கு !
ஆனி உத்தர முதநாளில் தேரேறி
ஆணி வேருடனே பகைகளைய வருவாளை
கண்களினால் காண்பதற்கு ஓடோடி வந்து
பணிவோரைக் காத்திடுவாள் கண்ணகை அம்பாள் !

-சரா

மலரமைப்பு :- ஸ்ரீ. சஞ்ஜீவன்

கட்டடப் பொருட்கள், பலசரக்குப் பொருட்கள், பால்மா வகைகள், கால்நடை தீவனங்கள் மற்றும் அபிஷேகப் பொருட்கள் என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்
அம்பாள் ஸ்ரோர்ஸ் (பேபி கடை)
அற்கின்சன் வீதி, வட்டுக்கோட்டை.

ஒளிக்கதிர் அழகுமாடம்
அன்பளிப்புப் பொருட்கள், பாடசாலை உபகரணங்கள், பாதணிவகைகள், அழகுசாதனப் பொருட்கள் மற்றும் போட்டோ பிரதி கவசிடுதல் (Laminating), Kit Card என்பனவற்றை பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.
தெல்லிப்பழை வீதி, சங்கரத்தைச் சந்தி, வட்டுக்கோட்டை.

கட்டடப் பொருட்கள், மின்சார உபகரணங்கள், பைப் வகைகள், நீர்த்தாங்கி, நீர்க் குழாய்கள் முதலியவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.
சச்சியா இரும்பகம்
தெல்லிப்பழை வீதி, வட்டுக்கோட்டை.

பலசரக்குப் பொருட்கள், பால்மா வகைகள், கால்நடை தீவனங்கள் மற்றும் அபிஷேகப் பொருட்கள் என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்
கரன் ஸ்ரோர்ஸ்
மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.

சகலவிதமான வாகனங்களும் சேவிஸ் செய்வதுடன், ஒயில்வகைகள் யாவும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
P.S. சேவிஸ் ஸ்ரேசன்
257/1 ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். T.P. 021 - 222 9247

கட்டடப் பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். குறித்த இடத்திற்கு கொண்டு செல்வதற்கான போக்குவரத்து வசதிகளும் பெற்றுக் கொடுக்கப்படும்.
ஐங்கரன் கட்டடப் பொருள் வாணிபம்
மாவடிச்சந்தி, வட்டுக்கோட்டை.

# கல்வி என்பது முன்னேற்றத்தின் அடிக்கல்

*ஈரெட்டுப் பதினாறில் பெறாத கல்வியும்*
*மூவெட்டு இருபத்து நாலில் செய்யாத திருமணமும்*
*நாலெட்டு முப்பத்திரண்டில் பெறாத பிள்ளையும்*
*ஐயெட்டு நாற்பதில் பெறாத செல்வமும்*
எதற்கும் உதவாது என்று கிராமங்களிலே கூறுவார்கள்.

ஒருவன் பதினாறு வயதை அடைவதற்கு முன் கல்வியின் முக்கிய பகுதியைக் கற்று முடித்து விட வேண்டும் என்பது உண்மையே. அதாவது வாழ்விலே எவற்றைக் கற்கவேண்டும் என்பதை இக்காலத்தில் அவன் அறிந்திட வேண்டும். கற்பதற்குக் கற்றல் (Learn to learn) இவ் வயதுக்கு முன் முடிவடைய வேண்டும். இக் கருத்தை மனதிலே கொண்டு தான் எமது நாட்டில் கட்டாயக் கல்விக்கான வயதெல்லை 6-14 ஆக இருக்கிறது.

**உயர் அழுத்த மின்சாரக் கம்பிகளின் அருகில் வாழ்தல் குழந்தைகளின் மனதில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்திக் கொலை உணர்வைத் தூண்டும்**

வாழ்க்கை என்பது ஒரு தொடர் மாறம். அம்மாற்றம் உடல், உள, சமூக, ஆன்மீக வளர்ச்சி கொண்டதாக ஒரு குறித்த இலக்கை நோக்கி அசைவதாக இருக்க வேண்டும். அப்பாதைக்குக் கல்வி ஒளி பாய்ச்சும்.

ஒரு குழந்தை பிறந்த நாலு வாரத்தில் ஒலிகளைக் கேட்கும். இரண்டு மாதத்தில் தலையை நிமிர்த்தும். மூன்று மாதத்தில் நெஞ்சை நிமிர்த்தும். ஐந்து மாதத்தில் இன்னொருவரின் மடியில் நிமிர்ந்து அமரும். ஏழு மாதத்தில் தானாக நிலத்தில் நிமிர்ந்து உட்காரும். பத்துமாதத்தில் தவழ்ந்து செல்லும். ஒரு வயதில் ஏதோ ஒரு நிலையான பொருளைப் பிடித்து எழுந்து நிற்கும். ஒன்றரை வயதுக்குள் தானே நடந்துசெல்லும்.

இவ்வாறு வெளியே அவதானிக்கத் தக்க உடல் தொடர்பான விருத்தி நடைபெற்றுக் கொண்டிருக்கையில், கல்வி தொடர்பான வளர்ச்சி எம்மை அறியாமலே நடைபெறுகிறது. தாயின் கருப்பையில் இருக்கும் போதே குழந்தை கற்கத் தொடங்கி விடுகிறது.

அக்கல்வியில் சூழலும் மரபும் தொடர்ந்து சொல்வாக்குச் செலுத்திய வண்ணம் இருக்கும். குழந்தையின் மூளை வளர்ச்சியானது தொண்ணூறு வீதம் அதன் இரண்டு வயதுக்கு முற்பட்ட காலத்தில் நிறைவடைகிறது.

ஆகவே இக்கால அனுபவங்கள் குழந்தை பிற்காலத்தில் பெறப்போகும் கல்வியின் தன்மையைத் தீர்மானிக்கும். பொதுவாக கடவுள் நம்பிக்கையுள்ள குடும்பம், குடும்ப உறவு நெருக்கமாக உள்ள குடும்பம், பெரியவர்கள் பதற்றமடையாத குடும்பம், விளையாட அனுமதிக்கும் குடும்பம், வசதியான இடங்களில் எல்லாம் தான் விரும்பியவற்றைக் கீற அனுமதிக்கும் குடும்பம், நன்றாகப் பாடவும் ஆடவும் அனுமதிக்கும் குடும்பம், பிள்ளை சமவயதுத் தோழர்களோடு நல்ல உறவு கொள்ள அனுமதிக்கும் குடும்பம் ஆகிய இடங்களில் வளரும் பிள்ளைகள் அதிர்ஷ்ட சாலிகள். அவர்கள் கல்வி முன்னேற்றம் இலகுபாதை. கற்பதற்கு வேண்டிய பொருத்தமான சூழலைக் குடும்பம் வழங்குகிறது.

இதற்கு முற்றிலும் எதிர்மாறாக, குடும்பத்தில் இரு பெற்றாரையும் இழந்த பிள்ளை அல்லது ஒரு பெற்றாரை இழந்த பிள்ளை அல்லது ஒரு பெற்றாரது அன்பை இழந்து அவர்களைப் பிரிந்திருக்கும் பிள்ளை பொருளாதாரப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்ட பிள்ளை, முகாமின் கஷ்டமான சூழலில் வாழும் பிள்ளை, அதீதமான குடும்ப நெருக்கீடுகளுக்கு ஆளான பிள்ளை இவர்கள் எல்லாம் கல்வியை முன்னெடுப்பது கடினமான விடயம்.

சிறுவயதில் பிள்ளைகள் பெறுகின்ற அனுபவங்கள் அவர்களின் ஆளுமையில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தவல்லன. ஹிட்லர் சிறுவயதில் யூத சமூகத்திடம் பெற்ற அனுபவமே, யூதர்கள் மீது அவனுக்கு பெரும் வெறுப்பை ஏற்படுத்தியதாகக் கூறப்படுகிறது.

உயர் அழுத்த மின்சாரம் கொண்டு செல்லும் கம்பிகளின் அருகில் வாழ்ந்தல் குழந்தைகளின் மனதில் பெருந் தாக்கத்தை ஏற்படுத்திக் கொலை உணர்வைத் தூண்டும் என்று கூறப்படுகிறது.

குழந்தை பிறந்து முதல் இரண்டு வருடங்கள் புலன் இயக்கப் பருவம் என்று பியாஜே கூறுவார். பிறந்த ஆறு மாதத்திற்குள் குழந்தை பொருள் ஒன்றை உள்ளங்கையால் பிடிக்கும். ஒரு வயதின் பின் பெருவிரலையும் ஏனைய விரல்களையும் எதிரும் புதிருமாகப் பாவித்துப் பொருள்களைக் கையாளும்.

**ஒரு பட்டதாரியை உருவாக்கும் செலவில் 70 சிறார்களுக்கு ஆரம்பக் கல்வி ஊட்டமுடியும்**

இக்காலப்பகுதியில் பிள்ளையின் புலன் அங்கங்களைத் தூண்டக்கூடியவாறு வழங்கப்படும் அனுபவங்கள் முக்கியமானவை எனக் கருதப்படலாம்.

குழந்தை பிறந்த முதல் வருடத்தில் அது பெறும் அனுபவங்கள் அதன் உள்ளத்தில் உலகம் பற்றிய நம்பிக்கையை அல்லது அவநம்பிக்கையைத் தோற்றுவிக்கும் என்று எரிக் எரிக்சன் என்ற உளவியலாளர் கூறுவார். தாய் அல்லது தந்தை குழந்தைக்கு அருகிருந்து, அன்பு காட்டி, பாதுகாப்புக் கொடுத்து, அது அழும் போதெல்லாம் குறை தீர்க்கப்படும் அனுபவத்தைக் குழந்தைக்கு வழங்குவார்களாயின் குழந்தையின் மனதில் நம்பிக்கையும் வாழ்வதற்கான ஆசையும் உறுதியாகத் தோன்றிவிடும்.

விடயங்கள் இதற்கு எதிர்மாறாக இருக்குமாயின் குழந்தையின் உள்ளத்தில் அவநம்பிக்கை ஏற்படும்.

அதேபோல ஒரு வயதுக்கும் இரண்டு வயதுக்கும் இடைப்பட்ட காலத்தில் பிள்ளையின் செயற்பாடுகள் நேரான முறையில் பாராட்டப்படும் இடத்தில் அது சுதந்திர உணர்வுடன் வளரும் என்றும், அதன் முனைப்புகள் தடுக்கப்படுமிடத்து அல்லது தண்டிக்கப்படுமிடத்துக் குழந்தை வெட்க உணர்வுடன் வளரும் என்று எரிக்சன் கூறுகிறார்.

ஆகவே குழந்தை நல்ல கல்விமானாக வளரவேண்டுமெனில் அதன் குழந்தைப் பருவம் செம்மையாகக் கவனிக்கப்பட வேண்டும்.

குழந்தை ஒன்றின் கல்வியில் முதலீடு செய்வதே குடும்பம் ஒன்று செய்யக் கூடிய மிகப் புத்திசாலித்தனமான முதலீடு என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

"கல்வி என்பது ஒரு பிள்ளை முன்னர் ஒருபோதும் நடந்துகொள்ளாத முறையில் நடந்து கொள்ளப் பயிற்றுதலாகும்" என்று அறிஞர் ரஸ்கின் கூறுவார்.

கல்வி ஒருவனது உறுதிப்பாட்டை அதிகரிக்கிறது. அவனுடைய சுய மதிப்பை உயர்த்துகிறது. சுய மதிப்பு உயரும்போது சில காரியங்களைச் செய்ய முடியும் என்ற நம்பிக்கை தோன்றுகிறது. "இன்றோ அல்லது நாளையோ ஒரு காரியத்தை செய்து முடிக்கிறவன் யாரென்றால், அந்தக் காரியம் தன்னால் செய்யப்படக்கூடியது என்று நம்புகிறவனே" என்று கூறுவார்கள்.

ஒரு பட்டதாரியை உருவாக்கும் செலவில் எழுபது சிறார்களுக்கு ஆரம்பக்கல்வி ஊட்ட முடியும் என்பதைக் கருத்தில் கொண்டு எமது நாட்டின் ஆரம்பக் கல்விக்குப் புதுப்பலம் ஊட்டப்படவேண்டும். வளர்முக உலகில் பதினொரு வயதுக்குக் குறைந்த நூறு மில்லியன் பிள்ளைகள் அடிப் படைக் கல்வி பெற வில்லை என்பது மிகவும் மன வருத்தத்துக்கு உரிய உண்மை.

அதிலும் ஆறுபது வீதமானோர் பெண் பிள்ளைகளாகவே காணப்படுகின்றனர். உலகின் கோடிக்கணக்கான பிள்ளைகளுக்கு படிப்புபராயம் தெருவிலும், வயலிலும், சிறு வேலைத்தலங்களிலுமே கழிகிறது. இதுபெரியதோர் உரிமை மீறல். ஒவ்வொரு மனிதனும் தனித்துவ இயல்புகளைக் கொண்டவன். கற்பதற்கு விருப்பமுள்ளவன். கல்வி மகிழ்வைத் தருவது. ஆகவே அது வாழ்வு நீடித்த கல்வியாக இருக்க வேண்டும். மகிழ்வுடன் கற்கப்பட வேண்டும்.

**கோகிலா மகேந்திரன்**
உதவிக் கல்விப்பணிப்பாளர்

நீர் நல்லது. ஆயினும் சாக்கடையில் ஓடினால் பயனில்லை. அது போலக் கல்வி நல்லது. ஆனாலும் அதனுடன் நல்லொழுக்கம் சேராவிட்டால் பயனில்லை. நல்லொழுக்கத்துடன் சேர்ந்த கல்வியைத் தாராளமாக வழங்குமிடத்து,சமுதாய முன்னேற்றம் இலகுவில் சாத்தியப்படும்.

## வருடாந்த விளையாட்டு விழா -2007

சுன்னாகம் வீதி- புத்தூர் வளர்மதி முன்பள்ளிச் சிறார்களின் வருடாந்த விளையாட்டு விழா -2007 23ஆம் திகதி சனிக் கிழமை பி.ப.1.00மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நடைபெற வுள்ளது.

பிரதம விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி அலகு பதில் பணிப்பாளர் க.கணேசநாதனும் யாழ்.தேசிய கல்வி யியற் கல்லூரி விரிவுரையாளர் திருமதி ஞா. கணேசநாாதனும் கலந்துகொள்ளவுள்ளனர். (அ)

# கணனி வலைப்பின்னல் மூலம் பாடசாலைகளுக்கு பாடவிதானம்

## அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

உலகின் திறந்த பொருளாதார கொள்கைக்கும் உலக மயமாக்கலுக்கு ஏற்பவும் மாணவர்களை இட்டுச் செல்லவேண்டிய பாரிய பொறுப்பு ஆசிரியர்களுக்கு உள்ளது. என பிரதி கல்வி அமைச்சர் எம்.ச்ச்சிதானந்தன் தெரிவித்தார்.

குருத்தலாவை தேசிய கல்லூரியின் அதிபர் ஏ.ஏ.சமூன் தலைமையில் பொது மைதானத்திடலில் நடைபெற்ற வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் விசேட அதிதியாகக் கலந்து உரையாற்றுகையிலேயே மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரை நிகழ்த்திய பிரதிக் கல்வி அமைச்சர் எமது மாணவர்களை தொழில் நுட்பத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் மாணவர்களுக்கு பயிற்சியளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

எனவே தான் கல்வி அமைச்சு கணனி வலைப்பின்னல் மூலம் பாடவிதானங்களை ஒவ்வொரு பாடசாலைக்கும் அனுப்பி வைக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

எதிர்காலத்தில் பாடசாலைக்கு பாட விதானங்களையும் ஆசிரியர் கையேடுகளை யும் கணனி வலைப்பின்னலூடே கையாளவுள்ளது. இதற்கு ஏற்றாற் போல் ஆசிரியர்களும் பயிற்றப்பட வேண்டி யது காலத்தின் தேவையாகும்.

கல்வி அமைச்சு ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சிப் பட்டறைகளை நடாத்தி இந்தியா போன்ற நாடுகளுக்கு மேலதிக பயிற்சிக்காக அனுப்பி வைக்க ஏற்பாடுகளை மேற்கொண்டுவருகின்றது என்றார். (அ)


காரைநகர் - புகலி
**சிவசுப்பிரமணியர் ஆலய அலங்கார உற்சவம் -2007**



**1 ஆம் நாள் உற்சவம்**

நிகழும் சர்வசித்து வருடம் ஆனித் திங்கள் 7ஆம் நாள் (21.06.2007) வியாழக்கிழமை, அதாவது இன்று முதல் தொடர்ந்து பத்து நாட்கள் அல்ங்கார உற்சவம் நிகழ முருகன் திருவருள் கைகூடியுள்ளது.

காலை 8.00 மணிக்கு அபிஷேகம்
11.30 மணிக்கு விசேட பூசை
மாலை 4.00மணிக்கு அபிஷேகம்
7.00மணிக்கு வசந்த மண்டப பூசை

29.06.2007 வெள்ளிக்கிழமை மாலை 6.00மணிக்கு முருகப்பெருமான் தேருக்கு எழுந்தருளுவார்.
30.06.2007 சனிக்கிழமை மாலை 6.00மணிக்கு தீர்த்தோற்சவம்

உற்சவகுருக்கள்:-சிவஸ்ரீ தெ.சோமசுந்தரக் குருக்கள்

உற்சவ காலங்களில் அடியவர்கள் ஆசாரசீலர்களாக வருகை தந்து எம்பெருமான் திருவருளைப் பெற்றுய்ய வேண்டுகிறோம்.

சுபம்

ஆலய பரிபாலன சபையினர்
புகலி சிவசுப்பிரமணிய கோவில்,
காரைநகர்.

(C-177)


# போசாக்குணவு பொதி வழங்கல்

கொக்குவில், தாவடி ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதியினரால் 23ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு சமிதி மண்டபத்தில் கொழும்பு இராமகிருஷ்ணமிஷனால் வழங்கப்பட்ட சமபோஷாக்குணவுப் பொதிகள் காசரோக நோயாளர்களுக்கும் இணுவில், தாவடி, சாவற்கட்டு, சுதுமலை ஆகிய இடங்களைச் சேர்ந்த வறுமைக்கோட்டிற்குட்பட்ட கர்ப்பவதிகள், பாலூட்டும் தாய்மார்களுக்கும் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரசாங்க அதிபர் க.கணேசும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், பண்ணை மார்புநோய் சிகிச்சை நிலையப் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சி.யமுனானந்தா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (அ)

## இராசிபலன்

21.06.2007
(ஆனி 7, வியாழக்கிழமை)
சஷ்டி காலை 5.57 மணிவரை
பூரம் பின்னிரவு 1.17 மணிவரை
இராகுகாலம் 01.24- 02.54மணிவரை
சுபநேரம் 07.24-08.54
இரவு நடேசர் அபிஷேகம்

**மேடம்:-** பணக்குறைவு ,அஜீரண ரோகம், குடும்பக் கவலை ,தொழிலில் ஆர்வம்.

**இடபம்:-** சிந்தனை மிகுதி, தன்னம்பிக்கைக் குறைவு, தொழிலில் மந்தநிலை, தனவிரயம்.

**மிதுனம்:-** மனோ தைரியம், உறவினர் வழி நன்மை, செய்தொழில் விருத்தி, மனமகிழ்ச்சி.

**கடகம்:-** அமைதிக்குறைவு, எடுத்த கருமங்கள் தாமதமாகும், பணக்குறைவு, வீண் பகை.

**சிங்கம்:-** பெரியோர் சந்திப்பு, தெளிந்த சிந்தை, தொழில்நன்மை, நல்ல மனை செல்லல்.

**கன்னி:-** மனச்சோர்வு, நிலை மாற்றம், சுபசெலவு, காரிய அலைச்சல்.

**துலாம்:-** தனதானிய சேர்க்கை, சயனசுகம், இஷ்டசித்தி ,போசன நன்மை.

**விருச்சிகம்:-** நல்ல செய்தி, நண்பர்கள் உதவி, முயற்சி கைகூடும், அன்பளிப்பு.

**தனுசு:-** உத்தியோக பங்கம், இடமாற்றம் சரீர பிரயாசை ,அதிக செலவு.

**மகரம்:-** அஜீரணக் கோளாறு, காரியத் தடங்கல், கலகம் அதிர்ஷ்டக்குறைவு.

**கும்பம்:-** நல்ல வரவேற்பு, காரிய நன்மை, சயனசுகம், தெய்வ சிந்தை.

**மீனம்:-** தடைப்பட்ட காரியம் நிறைவேறும், விருந்துபசாரம், உற்சாகம், பிறர் உதவி.

-வளவன்

ஒரு துருப்பிடித்த ஆணியை வெளியில் எடுப்பதற்கு சுவரைக் கொஞ்சம் உடைத்தெடுக்கவேண்டும்.

-இத்தாலி

வலம்புரி

## அரசு மீதான நம்பிக்கை இல்லா பிரேரணையை விரைவில் எதிர்பார்க்கலாம்

மங்கள சமரவீர புதிய கட்சியை ஆரம்பித்து விட்டார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் அமைச்சர் பதவி நீக்கப்பட்ட மங்கள சமரவீர மீளவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இணைவார் என்ற கருத்து பரவலாக அடிபட்டது.

இதற்கு மேலாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் அமைச்சர் பதவி பறிக்கப்பட்ட சிறிபதி சூரியாராட்சி போல மங்கள சமரவீரவையும் கைது செய்வதற்கான ஏற்பாடுகள் இடம் பெறுவதாகவும் செய்திகள் வெளிவந்தன.

இந் நிலையில் மங்கள சமரவீர சிறிலங்கா சுதந்திரக்கட்சி (மக்கள் பிரிவு) என்ற புதிய அரசியல் கட்சியை ஆரம்பித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறுவதற்கு மூலகாரணமாக இருந்தவர் மங்களசமரவீர என்பது மறுக்கமுடியாத உண்மை.

ஜனாதிபதித் தேர்தலில் நான் தவறு இழைத்து விட்டேன். மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்கியது நான் விட்ட பெரும் தவறு என மங்கள சமரவீர கூறியிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு அவர் கூறியதன் மூலம் அவரின் கூற்றுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தரப்பிலிருந்து எதுவித எதிர்ப்பும் தெரிவிக்கப்படாததிலிருந்தும் மங்கள சமரவீர தென்னிலங்கை அரசியல் புலத்தில் பலம் மிக்கவர் என்ற முடிபுக்கு நாம் வரலாம்.

எனவே அவரினால் புதிதான ஆரம்பிக்கப்பட்ட அரசியல் கட்சிக்கு செல்வாக்குக் கணிசமாக இருக்கும் என்பதுடன் பண்டாரநாயக்க குடும்பத்தின் வாரிசாக-இரு தடவைகள் ஜனாதிபதியாக பதவி வகித்த சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவின் ஆசியும், ஆலோசனையும் இருக்கும் என்பதும் மறுக்க முடியாத உண்மை.

அத்துடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அமைச்சரவையில்-அரசியல் அங்கம் பெற்றுள்ள எல்லோரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு

# கலைப்பீட விசேட பாடங்களுக்கு 138 மாணவர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடத்தில் கல்வியாண்டு 2006/07 இல் விசேட பாடங்களில் பயில்வதற்கு 138 மாணவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். இம் மாணவர்கள் உடனடியாக யாழ்.பல்கலைக்கழக பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 222 6714 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. தெரிவு செய்யப்பட்ட 138 மாணவர்களினதும் விபரம் வருமாறு;

ரி.மதீஸ்வரன், ஏ.யூலிதா, கே.வேலாயுதம், ஜெ.நிவேதிகா, ஜீ.கோபிதாஸ், ஜீ.கோபிகா, ஏ.மயூரன், ஏ.செபராஜா, பி.அமிர்தினி, எஸ்.செல்வமனோகரி, ரி.விஜிதா, அனுஷியா, பி.அருமைதுரை, ரி.கோவிந்தசாமி, ரி.நவராஜா, எஸ்.தர்சிகா, எம்.ராசேந்திரலிங்கம், என்.முத்துக்கிருஷ்ணன், திருச்சிற்றம்பலம், எல்.கோகுலவாணி, ரி.ரஜீபா, கே.கலாரஞ்சினி, வை.காயத்திரி, ஜெ.கஜந்தினி, எஸ்.சிவரஞ்சினி, வி.கேதீஸ்வரன்,

பி.பத்மரூபா, ஆர்.மைதிலி, கே.தேனுகா, என். சங்கீதா, எஸ் .பிரதீபன், வி.நவனீதன், கே.சதாசிவம், எஸ். பரமேஸ்வரன், வை.பிரதீவ், ரி.கஜேந்திரன், என்.விக்னேஸ்வரன், ரி.நதியா, ஜெ.சதாசிவம், எம்.ஜெனநந்தினி, ஈ.கார்த்திகா, எஸ்.சுகிர்தா, ஜெ.அலோசியஸ், ரி.மிதிலா, ஏ.லூட்ஸ் சஜிதா, கே. கீதாஞ்சலி, எம்.சுஜீபா, என்.துஷ்யந்தன், பி.கஜலட்சுமி, ஏ.திவ்யராஜ், என்.கல்பனா, ஆர்.நடராஜா, பி.வேர்ஜினி, எம்.செந்தில்குமரன், ரி.திருநிலைநாயகி,

ஆர்.ரேகன், என்.பிரிந்தினி, எஸ்.லாதாசாந்தி, எஸ்.சிவாஜினி, எஸ்.ஜெய்கணேஷ், எஸ்.அனுஷா, எம்.செல்வானந்தம், எம்.சிவஞானம், ரி.கிரியா, எம்.எம்.மேரிபிரதீபா, எம்.தர்மலிங்கம், பி.ஆறுமுகம், என்.பாமினி, பி.ரேகா, கே.ஜீவிதா, ஜீ.உதயரூபினி, எஸ்.எம்.றொசானி, கே.இந்திரன், ஏ.ஸ்ரெலா, ஏ.ஏ.யுரிசிலா, ஜெ.காயத்திரி, ஆர்.அஜித், பி.ஏ.ஏ.டலீமா, ஜே.எவ்.எம்.றொக்ஸி, ஆர்.நிரோஜன்,

எஸ்.எம்.சி.தூரம், என்.லோஜனா, எஸ்.எட்னா, பி.விஜிதா, ஆர்.பாலூ, கே. இளவரசன், ஏ.றயோசனா, எம்.றொசாயினி, எம்.எஸ்.வி.டலீமா, எஸ்.சுப்பிரமணியம், எஸ்.சதாசிவம், கே.அமலராணி, எஸ்.புஸ்பவதனா, பி.ரவீந்தினி, ஏ.எஸ்.பி.சைலெந்தினி, ஏ.சிவபாலசுந்தரம், கே.கேமலரூபினி, எஸ்.டி.சிபா, ரி.எஸ்.தர்சிகா, ஜெ.ரி.மேரிஸ்ரெலா, கே.றிஜினேல்ட், என்.நிரோஜன்,

கே.கபினா, சி.கமலினி, எஸ்.கிருபாகரன், கே.மகேந்திரன், ரி.இராசன், ரி.சிறீவர்ணன், வி.பரமசாமி, என்.நிஷாந்தினி, எஸ்.ஜனித்தா, கே.கலைவாணி, ரி.சிந்துஜா, எஸ்.கிருபாளினி, எஸ்.பாரதி, வி.அருள்குமார், பி.சங்கீதா, எஸ்.தவபாலசிங்கம், ரி.சிவரஞ்சினி, எம்.சுபரஞ்சினி,

எஸ்.வேகாந்தன், ரி.செல்வ நாதன், கே.கலைவதனி, எஸ்.வதனி, ஜெ.ஜெகமீலா, எ ம்.சுகந்தினி, கே.சர்மிளா, ஆர்.கீதா, கே.தர்சனா, ஏ.ரஜீதா, எஜ். விஜயரூபன், வி.வசீகரன், பி.கிருபாளினி, கே.பிரதா, எம்.சசிகலா, ரி.புவனேந்திரராசா, சி.ஏ.டெனிசீயஸ், பி.புஸ்பநாதன். (அ)

# தமிழர் தாயகப் பகுதிகளிலிருந்து 3 இலட்சம் பேர் இடம் பெயர்வு

## விடுதலைப்புலிகள் தெரிவிப்பு

ஐக்கிய நாடுகள் சபையினால் உலக அகதிகள் நாள் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது. அகதிகள் நாளையொட்டி தமிழர்களின் அகதி வாழ்க்கை குறித்த அறிக்கை ஒன்றை தமிழீழ விடுதலைப்புலிகளின் மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான விவகாரங்களுக்கான பேச்சாளர் நவரூபன் செல்வி வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;

தமிழர் தாயகத்திலிருந்து ஏப்ரல் 2006 முதல் 2007 ஆம் ஆண்டு வரை 3 இலட்சம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபையின் உயர் ஆணையம் தெரிவித்துள்ளது. யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமுலில் உள்ள நிலையில் ஒரு மிகக் குறிப்பிட்ட காலத்திலேயே மிகப்பெரும் தொகையான தமிழ் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

மட்டக்களப்பு மற்றும் திருகோணமலையிலிருந்து 2 இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களின் பெரும்பாலானோர் அண்மையில் இடம் பெயர்ந்து தற்காலிக முகாம்களில் சூரிய வெளிச்சத்தின் கீழ் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கான உணவு மற்றும் சுகாதார அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. குடிநீருக்காக பல மைல் தூரம் செல்கின்றனர். குழந்தைகளின் கல்வி நாசமாக்கப்பட்டுள்ளது.

இத்தகைய அகதி முகாம்களில் சுகாதாரம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. 2004 ஆம் ஆண்டு ஆழிப்பேரலையின் போது 3 இலட்சத்து 50 ஆயிரம் பேர் தமிழர் தாயகத்திலிருந்து இடம் பெயர்ந்துள்ளனர். ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட சிங்கள பொதுமக்களுக்கு அனைத்துலக உதவியுடன் நிரந்தரமான வீடுகள் கட்டித்தரப்பட்டுள்ளன.

பெருந்தொகையான பாதிக்கப்பட்ட தமிழ் மக்களே இன்னமும் தற்காலிக முகாம்களில் தான் வசித்து வருகின்றனர். தமிழ் மக்களுக்கான ஆழிப்பேரலை நிதி உதவிகளை அரசாங்கம் தடுத்துவிட்டது. மழையாலும் வெள்ளத்தாலும் அந்த மக்கள் மீண்டும் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.

தமிழர் தாயகத்தில் கடந்த 30 ஆண்டுகளில் அனைத்து தமிழர்களுமே ஒரு முறையேனும் இடப்பெயர்வுக்குள்ளாகி இருக்கின்றனர்.

இராணுவ தாக்குதல்களாலும் பெருந்தொகையான தமிழ் மக்கள் அகதிகளாக்கப்பட்டனர். 1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தை இராணுவம் ஆக்கிரமித்தபோது 4 இலட்சம் தமிழர்கள் அகதிகளாக்கப்பட்டனர். யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறி வெளிநாடுகளிலும் வன்னிப் பிரதேசங்களிலும் வசித்தோரில் அரைவாசிப் பேர் திரும்பிவிட்டனர்.

இலங்கையிலிருந்து 5 இலட்சம் தமிழர்கள் தாங்கள் வாழ்க்கையைக் காப்பாற்றிக் கொள்ளவும் கல்வி கற்கவும் வெளிநாடுகளுக்குத் தப்பியுள்ளனர். தமிழர் தாயக்கத்தின் ஒட்டுமொத்த மக்கள் தொகை 2 மில்லியன், 75 வீதத்தினர் இடம் பெயர்ந்துள்ளனர்.

தங்கள் தாயகத்திலிருந்து பலவந்தமாக தமிழ் மக்கள் வெளியேற்றப்படுவது என்பது அனைத்துலக மனித உரிமை விதிகளுக்கு எதிரானது. அது ஒரு மனித உரிமை மீறல். அனைத்துலக அளவில் தமிழ் மக்கள் தான் மிகவும் அதிக எண்ணிக்கையில் இடம்பெயர்ந்து பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். அரசாங்கத்தின் இக்கொடூர நடவடிக்கைகள் குறித்து அனைத்துலக சமூகம் விழித்துக்கொள்ள வேண்டும் என்று செல்வி தெரிவித்துள்ளார். (ச-5)

# மக்களின் யோசனை பெற்றுக்கொண்ட பின்பே

அத்துடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அமைச்சரவையில்-அரசியல் அங்கம் பெற்றுள்ள எல்லோரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு விசுவாசமானவர்கள் என்ற முடிபுக்கு நாம் வந்து விட முடியாது.

அங்கும் சந்திரிகா குமாரதுங்கவின் விசுவாசிகள் இருக்கவே செய்வர். இவர்கள் நிச்சயம் மகிந்தவை விட்டு விலகி மங்கள சமரவீரவின் புதிய கட்சியில் இணைவார்கள்.

அதே நேரம் மங்கள சமரவீரவினால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட புதிய கட்சியுடன் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி இணைந்து அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்கும் என்பது எதிர்பார்க்கப்படக்கூடியதொன்று.

ஆக மங்கள சமரவீரவின் புதிய கட்சியின் கன்னி முயற்சி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசு மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வருவதாக இருக்கும்.

இவ்வாறு நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவரும் போது அதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும்,ஜனாதிபதி மகிந்தவின் பக்கத்தில் இருக்கக்கூடிய அதிருப்தியாளர்களும் ஆதரவு வழங்குவார்கள் என்பது நிறுத்திட்டமான உண்மை. அதை தவறான கணிப்பீடாக எடுத்துக்கொள்ள முடியாது.

பாதிக்கப்பட்ட சிங்கள பொதுமக்களுக்கு அனைத்துலக உதவியுடன் நிரந்தரமான வீடுகள் கட்டித்தரப்பட்டுள்ளன.

அனைத்துலக சமூகம் விழித்துக்கொள்ள வேண்டும் என்று செல்வி தெரிவித்துள்ளார். (ச-5)

# மக்களின் யோசனை பெற்றுக்கொண்ட பின்பே கல்வியில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்

## ஜனாதிபதியிடம் தேசியக்கல்வி ஆணைக்குழு எடுத்துரைப்பு

(கொழும்பு)

சகல மக்களுக்கும் கல்வி பொதுவானது. கல்வித் தொகுதிகளில் ஏதாவது மாற்றங்களை ஏற்படுத்தவேண்டுமாயின் பொதுமக்களின் யோசனைகளையும் பெற்றுக் கொள்ள வேண்டும். கல்வித் தொகுதியில் மாற்றங்களை ஏற்படுத்தி அதில் மறுசீரமைப்பை ஏற்படுத்துவதற்கு குறிப்பிட்ட காலம் தேவைப்படுகின்றது என்று தேசிய கல்வி ஆணைக்குழு ஜனாதிபதியிடம் எடுத்து கூறியுள்ளது.

முதலாம் தரத்திற்கு மாணவர்களை சேர்த்துக்கொள்வது தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு அமைவாக தேசிய கல்வி ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்ட யோசனைகள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்ட பின்னர் இடம் பெற்ற கலந்துரையாடலின் போதே தேசிய கல்வி ஆணைக்குழு பிரதிநிதிகள் எடுத்துரைத்துள்ளனர்.

இவ் விடயம் தொடர்பாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; அலரிமாளிகையில் வைத்து கையளிக்கப்பட்ட இந்த யோசனைகள் தொடர்பாக தேசிய கல்வி ஆணைக்குழுவின் பிரதிநிதிகள்,ஜனாதிபதி,பதில் கல்வி அமைச்சர் நிர்மல கொத்தலாவல,ஜனாதிபதியின் செயலாளர்,கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கிடையில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.1961ஆம் ஆண்டு பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றதிலிருந்து கடைப்பிடிக்கப்படுகின்ற சுற்றறிக்கையின் பிரகாரமே இன்று வரையிலும் தரம் 1 இற்கு மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

இச் சுற்றறிக்கையை நடைமுறைப்படுத்துக்கின்ற பொழுது சில பாடசாலைகளில் அதனை நடைமுறைப்படுத்த முடியாதிருப்பதாகவும் அதில் முழு மாற்றத்தை ஏற்படுத்துவது தொடர்பாகவும் உயர்நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் எவ்வாறு நடைமுறைப்படுத்துவது குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டது. (ச-5)

# 'சிங்கிதி பத்தும்' பரிசளிப்பு வைபவம்

(யாழ்ப்பாணம்)

ஹற்றன் நஷனல் வங்கியின் சிங்கிதி பத்தும் சீட்டிழுப்பின் பரிசளிப்பு வைபவம் நாளை பிற்பகல் 3 மணிக்கு மானிப்பாய் கிளையில் நடைபெறவுள்ளது. (ச)

# கோதுமை மாவின் விலை நிர்ணயம்

(யாழ்ப்பாணம்)

இந்துருவலி-8 கப்பலில் எடுத்துவரப்பட்ட கோதுமை மா இன்று முதல் ஒரு கிலோ 55 ரூபாவாக விற்பனை செய்ய வேண்டுமென யாழ்.அரச அதிபர் க.கணேஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அறிவித்துள்ளார்.

இதேவேளை 20.06.2007 இல் உள்ள கோதுமை மாவின் இருப்பு விபரத்தினை பிர தேச செயலரூடாக உறுதிப்படுத்தி எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்திற்குக் கிடைக்கக்கூடிய வாறு அனுப்பி வைக்குமாறு அரச அதிபர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங் ளுக்கு அறிவித்துள்ளார். (ச)

# பாராளுமன்றில் அபூர்வ நிகழ்வு
# ஊடகத்துறை அமைச்சர் கூறுகிறார்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் அபூர்வ நிகழ்வு ஒன்று இடம்பெற்றதாகத் தகவல் ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா தெரிவித்தார்.

அரசுக்கெதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விளக்கமளிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு ஒன்று அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்றபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

ஒன்றுக்கொன்று உடன்பாடில்லாத ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பன ஒன்றிணைந்ததே அவ் அபூர்வ நிகழ்வு என அமைச்சர் கூறினார். அவர் மேலும் கூறியதாவது,

கிழக்கில் இப்போதும் மேற்கொள்ளப்பட்டு வரும் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் முடிபடைந்த பின்னர் அப்பிரதேச மக்கள் தமக்கான அரசியல் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் வகையில் கிழக்கில் சுதந்திரமான தேர்தல் ஒன்றை இன்னும் சில மாதங்களில் நடத்துவதன் சாத்தியக்கூறுகள் பற்றி ஜனாதிபதி கவனம் செலுத்திவருவதாகத் தகவல் ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா கூறினார்.

அரசுக்கெதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விளக்கமளிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று அரசாங்கத் தகவல் திணைக்களக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படும் சொத்துக்கள் மற்றும் வாகனங்களுக்கான கடன்களுக்கு அறவிடப்படும் வட்டி வீதம் குறைக்கப்படாவிட்டால் தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்தப் போராட்டம் ஒன்றை நடத்தப் போவதாக சில பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. இது தொடர்பாக எமது அரசாங்கத்தின் நிலைப்பாட்டைத் தெரிவிக்க நாம் கடமைப்பட்டுள்ளோம்.

தொழிற்சங்கப் பிரதிநிதிகளை அலரி மாளிகையில் ஜனாதிபதி அண்மையில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.அரசாங்க ஊழியர்களின் கடன்களுக்கு அறவிடப்படும் வட்டி வீதம் குறித்து இங்கு இணக்கம் காணப்பட்டது.

அத்துடன் முந்திய அரசாங்கங்கள் எதுவும் வழங்காத வாகன அனுமதிப் பத்திரத்தை எமது அரசாங்கம் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்குகிறது. 70 வீத சம்பள அதிகரிப்பும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே அரசாங்கத்துக்கு எதிரான எத்தகைய செயற்பாடுகளுக்கும் முகங்கொடுக்க அரசு தயாராகவே உள்ளது.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் ஓர் அபூர்வ நிகழ்வு இடம்பெற்றது. ஒன்றுக்கொன்று உடன்பாடில்லாத ஐ.தே.க., ஜே.வி.பி., தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு என்பன ஒன்றிணைந்து அரசாங்கத்தின் குறைநிரப்புப் பிரேரணையைத் தோற்கடிக்கும்சதி முயற்சியில் ஈடுபட்டன.

எனினும் 20 மேலதிக வாக்குகளால் அரசாங்கம் வெற்றி பெற்றது. எதிர்காலத்திலும் இவ்வாறே அரசுக்கு எதிரான சவால்களை முறியடிக்கும் பலம் அரசாங்கத்திற்குள்ளது என்றும் அமைச்சர் கூறினார். (ச-5)

## நாடாளுமன்ற...

அதிலிருந்த காகிதாதிகளினை கலைத்தது மாத்திரமல்லாது தனது தனிப்பட்ட செயலாளரைத் திட்டியுள்ளதாக திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டார்.பொலிஸ் அதிகாரிகளின் இவ்வாறான செயற்பாடுகள் காரணமாக நாடாளுமன்ற உறுப்பினர்களின் கௌரவத்திற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-3)

## இலங்கையில்...

தரப்பினரும் அமைதிப் பேச்சுக்களை உடனே தொடங்க வலியுறுத்த வேண்டும் என்றும் அத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் தங்கள் அரசியல் இலக்குகளுக்காக வன்முறைகள் மேற்கொள்வதைக் கைவிட வேண்டும் என்றும் அமைதியைப் பாதுகாக்க அமெரிக்கா தலையிட வேண்டும் என்றும் அமெரிக்க ஜனாதிபதிக்கு அத் தீர்மானம் பரிந்துரைத்துள்ளது. (ச-5)

## அரசாங்கத்...

போது எத்தரப்பினாலும் தரப்படும் முறைப்பாடுகளைக் கவனத்தில் எடுத்துக் கொள்கின்றோம். ஆனால் அது தொடர்பான முடிபை தெரிவிப்பதில்லை எனவும் கூறினார்.

இலங்கையில் கடந்த 35 வருடகாலமாக இருந்த இனப் பிரச்சினையில் 60 ஆயிரம் உயிர்கள் இழக்கப்பட்டன. அவற்றைத் தொடராமல் தடுக்கப் போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும் கடந்த 2 வருடகாலமாகத் தற்காலிகமாக நிகழ்ந்த வன்முறைகளால் போர்நிறுத்த ஒப்பந்தம் செயலற்றுப் போயுள்ளது என அப்பேச்சாளர் தெரிவித்தார். (ச)

## கொழும்பில்...

யாழ்ப்பாணத்திற்கு அழைத்துசென்றதால் தங்களுடைய அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக அவர்கள் அம் மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

பொலிஸ் மாஅதிபர், வெள்ளவத்தைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி,கொழும்புப் பிரதேசத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மாஅதிபர் உட்பட பலர் இம்மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தங்களின் அடிப்படை மனித உரிமை மீறப்பட்டமையால் அதற்கு நஷ்டஈடாக 10 லட்சம் ரூபாவை பெற்றுத் தரவேண்டும் எனவும் அம் மனுவில் கூறப்பட்டுள்ளது. (ச-3)

## உலகில்...

மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய் வில் முதலிடத்தில் சூடான் நாடு உள்ளது. இரண்டாம் இடத்தில் ஈராக் உள்ளது. உலகிலே மிக மோசமான- தோல்வியடைந்த நாடாகச் சூடான் உள்ளது.

சோமாலியாவும் சிப்பாவேயும் தோல்வியடைந்த நாடுகளின் வரிசையில் 3 மற்றும் 4 ஆம் இடங்களில் உள்ளன. தோல்வியடைந்த நாடுகளின் வரிசையில் இலங்கைக்கு 25 ஆம் இடம் கிடைத்துள்ளது.

ஹங்கோ, லைபீரியா, லெபனான், மலாவி, ருவாண்டா, சிரியா, கம்போடியா, அங்கோலா மற்றும் ஈரான் ஆகிய நாடுகளை ஒப்பிடுகையில் இலங்கை மிக மோசமாக வுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ச-5)

## இராணுவம்...

நிமிர்த்தம் கல்குடாவில் தங்கியிருந்ததாக உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

விசாரணையின் பின் அவர்களின் சடலங்கள் பொலிஸாரால் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (ச-3)

## கடற்படை டோறா படகு சேதம்- புலிகள்...

வெற்றிலைக்கேணிக் கடற்பரப்புக்குத் தெற்கில் அமைந்துள்ள கடிவைக்காடு பிரதேசத்திலிருந்து பருத்தித்துறையை நோக்கிச் சென்று கொண்டிருந்த புலிகளின் 20 இற்கும் மேற்பட்ட வள்ளங்கள் மீது நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் கடற்படை, வான்படை என்பன ஒன்றிணைந்து தாக்குதல் நடாத்தி அவர்களின் முயற்சியை முறியடித்தனர்.

புலிகளின் 5 வள்ளங்கள் இத்தாக்குதலின்போது முற்றாக அழிக்கப்பட்டன. அத்துடன் கடற்புலிகளின் 9 வள்ளங்களுக்குப் பெருஞ்சேதங்களும் ஏற்பட்டன.

கடற்படையின் டோறாப் படகு இக் கடல் எல்லையில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தது. இதன்போது கடற்புலிகளின் 15 முதல் 20 வரையான வள்ளங்களை இவர்கள் அடையாளம் கண்டுள்ளனர்.

அவை புலிகளின் படகுகள்தான் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் பருத்தித்துறைக் கடல் எல்லையிலிருந்து கடற்படையினர் அதன்மீது தாக்குதல் நடத்தினர்.

இத் தாக்குதலில் 40இற்கும் மேற்பட்ட கடற்புலிகள் கொல்லப்பட்டனர் என்பதனைப் புலிகளின் தொலைத்தொடர்புகள் ஊர்ஜிதம் செய்தன. இத்தாக்குதலுக்காக வந்த புலிகளின் வள்ளம் ஒன்றைக் கடற்படையினர் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு எடுத்து வந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை யாழ்.வடமராட்சி கிழக்குக் கடற்பரப்பில் நடந்த மோதலில் கடற்படை டோறாப் பீரங்கிப் படகு ஒன்று சேதமாகியுள்ளதாக விடுதலைப்புலிகள் தெரிவித்தனர்.

வடமராட்சி கிழக்குக் கடற்பரப்பில் கட்டைக்காடு முதல் பருத்தித்துறை வரையான கடற்பரப்பில் செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணி முதல் இரவு 10.30 மணிவரை கடற்புலிகளுக்கும் கடற்படைப் பீரங்கிப் படகுகளுக்கும் இடையில் தொடர் மோதல் நடைபெற்றது.

இம்மோதலின் போது கடற்படையின் டோறாப் பீரங்கிப் படகு ஒன்று.சேதமாகியது. இப் படகைக் கடற்படையினர் கட்டி இழுத்துச் சென்றனர். இதில் கடற்புலிகள் தரப்பில் போராளிகள் இருவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர் என விடுதலைப்புலிகளின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ச-5)

## தனது கட்சியுடன் இணைந்து...

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அதிருப்திக்குழுவினால் உருவாக்கப்பட்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சி (மக்கள் பிரிவு)யில் இணையுமாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர நேற்று மின்னஞ்சல் மூலம் அழைப்பு விடுத்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை சரியான வழிக்கு இட்டுச் செல்ல உதவிவழங்குமாறு அவர் முன்னாள் ஜனாதிபதியிடம் கோரியுள்ளார் [illegible] குறிப்பிட்டார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை சரியான பாதையில் இட்டுச் செல்வதற்காக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைத் தம்முடன் இணையுமாறு மங்கள சமரவீர கோரிக்கை விடுத்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, கட்சி அரசியலுக்கு வர விருப்பமில்லை எனக் குறிப்பிட்ட போதும் கட்சியைக் காப்பாற்றுவதற் [illegible]




நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

அம்பிகை அடியார்களுக்கான

விசேட அறிவித்தல்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் அறங்காவலர் சபைக்கு எதிராக 2004 ஆம் ஆண்டு முகாமைத்திட்டத்திற்கு முரணாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் 19.06.2007 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பதனை அம்பிகை அடியார்களுக்கு அறியத் தரு

...அழைப்பு விடுத்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை சரியான வழிக்கு இட்டுச் செல்ல உதவி வழங்குமாறு அவர் முன்னாள் ஜனாதிபதியிடம் கோரியுள்ளார்.

இக் கோரிக்கை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி சில தினங்களில் அவரது பதிலை வழங்குவார் என்று அவரின் செயலாளர் பிய சேன திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

லண்டனிலுள்ள சந்திரிகா இரு வாரங்களுக்குள் நாடு திரும்புவார் என்றும் குறிப்பிட்டார். அதன் பின் அரசியல் ரீதியில் தனதுநிலைப்பாட்டை வெளியிடுவார் என்றும் திஸாநாயக்க கூறினார். இதேவேளை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவை பிரதிநிதித்துவப்படுத்தும் முகமாகக் கொள்கைப் பிரகடனம் ஒன்றை வெளியிடவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர், இக்கொள்கைப் பிரகடனம் எதிர்வரும் வாரத்தில் வெளியிடப்படும் எனக் குறிப்பிட்டார். அனைத்துக் கட்சிகள் மற்றும் பொதுமக்களின் அமைப்புக்களுடன் இக் கொள்கை தொடர்பில் பேச்சுக்கள் நடத்தப் படும் என அவர் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி அதிகாரம் படைத்த சிலரது கைகளில் உள்ளதாகத் தெரிவித்த அவர், அவர்களுக்கு எதிராக தமது செயற்பாடுகள் அமைந்திருக்கும் எனக் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, கட்சி அரசியலுக்கு வர விருப்பமில்லை எனக் குறிப்பிட்ட போதும் கட்சியைக் காப்பாற்றுவதற்காக அவரின் உதவி அவசியம் என மங்கள சமரவீர தெரிவித்தார்.

இந்நிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் உள்ளக ஜனநாயகம் முழுமையாகச் செயலிழந்துள்ளது. கப்பம்பெறுதல் மற்றும் கடத்தல்கள் அதிகரித்துள்ளன.

அதன் காரணமாக முதலீட்டாளர்கள் நாட்டிலிருந்து வெளியேறுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கை அரைவாசி பொலிஸ் அரசாங்கமாக மாறியுள்ளது. அரசியல் மயப்படுத்தப்பட்ட பொலிஸார் அரசாங்கத்திற்கு எதிராகப் பேசுபவர்களை அழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் காரணமாக ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பி. உறுப்பினர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக மங்கள தெரிவித்துள்ளார்.

இலங்கை சர்வதேசத்தின்மத்தியில் அபகீர்த்தி நிலையையடைந்துள்ளது. சர்வதேசத்தின் ஆதரவைப் பெறுவதற்குப் பதிலாக அரசாங்கத்தின் முக்கியமானவர் சர்வதேசத்தை தூசிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும் மங்கள சமரவீர குற்றஞ்சுமத்தியுள்ளார். மேலும் துப்பாக்கிக் குண்டுகளுக்கு ஆளாவதற்கும் சிறைக்குச் செல்லவும் தயார் என அவர் குறிப்பிட்டார். (சு-3)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் அறங்காவலர் சபைக்கு எதிராக 2004 ஆம் ஆண்டு முகாமைத்திட்டத்திற்கு முரணாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் 19.06.2007 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பதனை அம்பிகை அடியார்களுக்கு அறியத் தருகின்றோம்.

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் அறங்காவலர் சபைக்கு எதிராக மாவட்ட நீதிமன்றினால் பிறப்பிக்கப்பட்ட இடைக்காலத் தடையுத்தரவுகள் அனைத்தும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. 19.06.2007 தொடக்கம் அறங்காவலர் சபையின் நிர்வாகத்தின் கீழ் ஆலய நடவடிக்கைகள் அனைத்தும் வழமைபோலவே அறங்காவலர் சபைத் தலைவர் திரு.கா.ஆ.தியாகராசா (முன்னாள் உதவி அரசாங்க அதிபர்) அவர்கள் தலைமையில் நடைபெறுகின்றன என்பதனையும் அம்பிகை அடியார்களுக்கு அறியத் தருகின்றோம்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அமைய இக்கோவிலில் இதுவரை நிறைவேற்று அலுவலகராகப் பணியாற்றிய,

நிறைவேற்று அலுவலர்;

திரு.நாகமுத்தன் யோகநாதன்,

கணக்காளர்; திரு.சின்னத்தம்பி வசந்தன் (தாமாகவே பதவி விலகிவிட்டார்)

தரவு நிரற்படுத்துநர்;

திரு. செல்லையா சுதர்சன் ஆகியோர் தத்தமது பொறுப்புக்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர் என்பதனையும் அறியத் தருகின்றோம். மேற்குறிப்பிடப்பட்டோரோடு ஆலய நிர்வாகம் சம்பந்தமாக எந்தவிதத் தொடர்புகளையும் மேற்கொள்ள வேண்டாமெனவும் கேட்டுக் கொள்கின்றோம். அனைத்துத் தொடர்புகளையும் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய அறங்காவலர் சபையுடன் மேற்கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

கு.சரவணபவானந்தன்
செயலாளர்
அறங்காவலர் சபை
ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில்,நயினாதீவு

20.06.2007

(146)

[illegible] புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.06.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.